மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2026 நவம்பர் 16-30 தொகுதி 25 இதழ் 8
விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200



தோழர் சம்புஜி நினைவேந்தல்



பீகார் தோழர்கள் மற்றும் மாநிலத்தின் ஒட்டுமொத்த இடதுசாரி அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் இணைந்து, மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்த ரவீந்திர பவன் அரங்கில் தோழர் சுதேஷ் அவர்களுக்கு நினைவேந்தல் கூட்டம் நடைபெற்றது. ஐம்பது ஆண்டுகளாக தோழர் எஸ்.பி.(SB) அவர்களின் இணைபிரியாத போராட்டத் தோழராக விளங்கிய தோழர் மீராதி இக்கூட்டம் முழுவதும் உடனிருந்தார். இகக(மாலெ) விடுதலை பொதுச் செயலாளர் தோழர் திபங்கர், மத்திய தலைமையகத் தோழர் பிரபாத் சவுத்ரி, தோழர் ராம்ஜி ராய் மற்றும் மேற்கு வங்க மாநிலச் செயலாளர் தோழர் அபிஜித் மஜும்தார் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். மேடை முழுவதும் அவரது நினைவால் நிரப்பப்பட்டிருந்தது. பேச்சாளர்கள் பேசும்போது மட்டுமே மேடையைப் பயன்படுத்தினர்.

1970-களில் பீகாரில் தலைமறைவு கட்சியின் செயலாளராக தோழர் ஸ்வதேஷ் அவர்கள் வழிநடத்திய காலத்திலிருந்து, சமீபத்திய ஆண்டுகளில் போஜ்பூர் தோழர்களுக்கும் விவசாய மற்றும் கிராமப்புற தொழிலாளர் முன்னணியில் பணியாற்றும் தோழர்களுக்கும் அவர் வழிகாட்டியது வரை அவருடன் இணைந்து பணியாற்றிய அனுபவங்களைப் பல தோழர்கள் நினைவுகூர்ந்தனர். அவரது தன்னலமற்ற அர்ப்பணிப்பு, உறுதியான தலைமை, கட்சியைக் கட்டமைக்க மக்களுடன் ஒன்றிணைந்து அவர்களைச் சார்ந்திருந்த பாங்கு, அமைப்பை வலுப்படுத்துவதிலும் கட்சியின் அனைத்து மட்டங்களையும் ஈடுபடுத்துவதிலும் அவர் செலுத்திய தொடர் கவனம் ஆகியவை, பாசிச எதிர்ப்புப் போராட்டத்தின் இந்த சவாலான காலகட்டத்தில் தோழர்களுக்குத் தொடர்ந்து உத்வேகமும் வழிகாட்டுதலும் அளிக்கும்.



மேற்கு வங்கத்தின் தோழர்களும் பல்வேறு இடதுசாரி கட்சிகளின் தோழர்களும் இணைந்து தோழர் ஸ்வதேஷ் அவர்களுக்கு 13.11.2026 அன்று கொல்கத்தாவில் நினைவேந்தல் நிகழ்ச்சி நடத்தினர். தோழர் திபங்கர், தோழர் ஸ்வதேஷ் அவர்களுடன் பணி செய்த தோழர்கள், குறிப்பாக அவர் ஆரம்பத்தில் ராஞ்சி ஹெவி எஞ்சினியரிங் கார்ப்பரேஷனில் பணியாற்றியபோது அவருடன் பணிபுரிந்த தோழர்கள் அவருடன் பயணித்த நாள்களைப் பகிர்ந்து கொண்டனர். 1980களில் 13 எம்எல் அமைப்புகளை ஒன்றிணைத்து தோழர் ஸ்வதேஷ் அவர்கள் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டதையும் அவரின் அர்ப்பணிப்பு, பொறுமை, அக்கறை யுடன் கேட்பது, பரந்த மனப்பான்மை ஆகியவற்றைப்பற்றியும் மார்க்சிய எழுத்தாளர் திலக் தாஸ் நினைவு கூர்ந்தார். 2018ஆம் ஆண்டு தோழர் ஸ்வதேஷ் அவர்களிடம் எடுக்கப்பட்ட நேர்காணல் வீடியோ முக்கிய சில பகுதிகளை தோழர் மித்தாலி பிஸ்வாஸ் திரையிட்டார். நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு கட்சியின் அரசியல் தலைமைக்குழு தோழர் கார்த்திக்பால் தலைமை தாங்கினார். தோழர் அட்டானு சக்கரவர்த்தி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். சலில் சவுத்ரியின் உணர்ச்சிகரமான பாடலை பாபு மஜும்தார் பாடினார். தோழர் அபிஜித் மஜும்தார் மத்திய கமிட்டியின் அஞ்சலி தீர்மானத்தை முன்வைத்தார். மூத்த தோழர் மீனாபால், அகில இந்திய மாணவர் கழகம் மற்றும் ஜேஎன்யுவின் மேனாள் தலைவர் சுசேதா, அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் சசியாதவ், தோழர் ஸ்வதேஷ் அவர்களின் சகோதரர் சியாமல் ஆகியோர் தோழருடனான தங்கள் அனுபவங்களை நினைவு கூர்ந்தனர். தோழர் மெகுலி சக்ரவர்த்தி தாகூரின் கவிதையை முன்வைத்தார். சர்வதேசிய கீதத்தை அனைவரும் பாட நிகழ்ச்சி நிறைவுற்றது. தோழர் ஸ்வதேஷ் அவர்களின் புரட்சிகர மரபுக்கு மேலும் வலு சேர்ப்போம்.



மாலை தீப்பொறி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)

தமிழ்நாடு மாநிலக் குழுவின்
அரசியல் ஏடு

இருவார இதழ்
2026 நவம்பர் 16-30
தொகுதி 25 இதழ் 8

முதன்மை ஆசிரியர்
சங்கர்.வீ

ஆசிரியர்
ஜி.ரமேஷ்

ஆசிரியர் குழு
பழ.ஆசைத்தம்பி
பாலசுந்தரம்
அ.சந்திரமோகன்
கே.ஜி.தேசிகன்

மேலாளர்
சொ. இரணியப்பன்

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

நிர்வாக அலுவலகம்
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர், சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com

பெரியாரும் பெரியவாளும்

கோவை பெரியார் அறிவுலகம் திமுக ஆட்சியில் கட்டப்பட்டது. தவெக ஆட்சியில் முதல்வர் விஜயால் திறக்கப்பட்டது. கோவை பெரியார் அறிவுலகத்தில் இருந்த ஆயிரக்கணக்கான நூல்கள் போலியானவை என்பது வெளிவந்துள்ளது. மாநிலத்தில் உள்ள பிற நூலகங்களிலும் இந்த அகல்விளக்கு, ஃபீனிக்ஸ் பதிப்பக நூல்கள் உள்ளன என்றும் செய்திகள் வருகின்றன. 300 ரூபாய் புத்தகம் 1200 ரூபாய் விலை. பல கோடி ரூபாய்க்கு ஊழல் நடந்துள்ளது என்பது அப்பட்டமாகத் தெரிகிறது. திமுக அரசு நூல் கொள்முதலில் பெரும் ஊழல் செய்துள்ளது என முதல்வர் உடனடியாக அறிவித்தார். பள்ளிக் கல்வி அமைச்சர் ராஜ்மோகன் நாங்கள் கொள்முதல் செய்யவில்லை, அட்டைப் பெட்டியில் இருந்ததை அடுக்கித்தான் வைத்தோம் என்றார்.

திமுக ஆட்சியில் நூல்கள் கொள்முதல் செய்வதற்காக தனிச் சட்டமே உருவாக்கப்பட்டு, திட்டக்குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன் தலைமையில் அறிஞர்கள், ஆய்வாளர்கள், கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், வாசகர்கள் நூலகக்குழுவும் அமைக்கப்பட்டது. அறிவு வளர நூலகமே சிறந்த வழி எனக் கருதி முதல்முதலாக தமிழ்நாட்டில் 1948ஆம் ஆண்டு பொது நூலகச் சட்டம், 1972ஆம் ஆண்டு பொது நூலக இயக்கம் உருவாக்கப்பட்டன. தமிழ்நாட்டில் இயங்கி வரும் 4,755 நூலகங்களுக்கான அச்சு நூல்கள் மற்றும் மின்நூல்கள் கொள்முதலில் குளறுபடி, முறைகேடு தவிர்க்க "வெளிப்படைத் தன்மையான நூல்கள் கொள்முதல் கொள்கை 2024" உருவானது. இந்தக் கொள்கைக்குட்பட்டே கோவை பெரியார் அறிவுலகம் உள்ளிட்ட சிறப்பு நூலகங்களுக்கும் ஆறு மாவட்டங்களில் புதிதாக உருவாக்கப்பட்ட மைய நூலகங்களுக்கும் நூல்கள் கொள்முதல் செய்வதற்காக அரசாணை 2025 நவம்பர் 05 அன்று வெளியிடப்பட்டது. அகல்விளக்கு பதிப்பக உரிமையாளர் மோகன் தொலைக் காட்சிகளில் உலா வந்தார். நீதிமன்ற தலையீட்டிற்குப் பின்னர் ஒரு வாரம் கழித்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்போது பல கோடி ரூபாய் ஊழல் என்பதைக் காட்டிலும் தமிழ்நாட்டின் அறிவு மரபை அழிக்க எடுக்கப்பட்ட செயல்தான் இதுபோன்ற புத்தகக் கொள்முதல். இதுதான் மிகவும் ஆபத்தான ஒன்று. உண்மைக்குப் புறம்பாக பொய்யும் புரட்டுமாக, அங்கங்கே எடுத்துச் சேர்த்து ஒன்றுக்கொன்று தொடர்பே இல்லாமல் அந்த நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்குப் பின்னே ஒரு திட்டமிட்ட சதி இருப்பதாகத் தெரிகிறது. ஓர் இனத்தின் அல்லது மொழியின் அடையாளத்தை அழித்திட அதிகார வெறி கொண்ட ஆட்சியாளர்கள் முதலில் கை வைப்பது அறிவை புகட்டும் நூல்கள் மீதுதான். நாசிச ஜெர்மனியில், இலங்கை யாழ்ப்பாணத்தில், கொல்கத்தாவில் எங்கும் பாசிஸ்டுகள் முதலில் நூலகத்தைதான் தீக்கிரையாக்கினார்கள். வாஜ்பாய் ஆட்சிக் காலத்திலேயே சென்னை பாரதி புத்தகாலயத்தைச் சூறையாடியாடினர். அடுத்து அவர்கள் செய்வது வரலாற்றை திரித்து, உண்மையை மறைத்து கட்டுக் கதைகளை எழுதிப் பரப்புவது.

தமிழ்நாட்டின் அறிவு மரபு அலாதியானது. பரந்து விரிந்தது. சங்க இலக்கியம் முதல் புத்திலக்கியம் வரையும் சித்தர் பாடல்கள் முதல் சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என அரிய பல பொக்கிஷங்களைத் தந்தது தமிழ் அறிவு மரபு. அந்த அறிவு மரபை அழிக்கத் துணிந்துள்ளார்கள். பண்டைய தமிழ்நாட்டில் கடவுள் வழிபாடு இருந்ததற்கான அடையாளமே இல்லை எனக் காட்டும் கீழடி பற்றி அவதூறு பரப்ப அட்டையில் நந்தி படத்தைப் போட்டு பெரியார் நூலகத்தில் வைத்துள்ளார்கள் கெடுமதியாளர்கள். பகுத்தறிவிற்கு, முற்போக்கு விழுமியங்களுக்குப் பெயர் பெற்ற பெரியார் மண்ணில், தமிழ்நாட்டில் சங்கிகள் தங்கள் பிற்போக்கு இந்து மதவெறி பாசிசச் திட்டங்களை அமல்படுத்த பல வழிகளிலும் முயற்சித்து வருகிறார்கள். திமுக ஆட்சியிலேயே நீதித்துறை, நிர்வாகத்துறை, காவல்துறை மூலமாக சங்கிகள் தங்கள் கைவரிசையைக் காட்டிக் கொண்டுதான் இருந்தார்கள். கோவையில் காந்தி பிறந்த நாள் நிகழ்ச்சியின் போது, 'காந்தியைக் கொன்ற கோட்சே என பேசக் கூடாது' என்று தோழர் ஜி.ராமகிருஷ்ணனுக்கு தடை போட்டது காவல்துறை. தான் சனாதனவாதி என்று வெளிப்படையாகவே அறிவித்துக் கொண்டு, எல்லைத் தூணை தீபத்தூணாக்கி பொல்லாத வேலை செய்து வரும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன், கோயிலில் பிராமணர் சாப்பிட்ட எச்சில் இலையில் புரள்வது புண்ணியம் என்றார். அவர் இப்போது,

தொடர்ச்சி 5 ம் பக்கம்...

நெதன்யாகு பதவியிழப்பு, டிரம்புக்கு பின்னடைவு, தனது முறைக்காகக் காத்திருக்கும் நரேந்திர மோடி!

பிரேசில், செர்பியாவில் தீவிர வலதுசாரிகள் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இப்போது ஏகாதிபத்தியத்தின் இதயப் பகுதியான அமெரிக்கா – இஸ்ரேலிலிருந்தும் இன்னும் கூடுதலாக ஊக்கமளிக்கும் செய்திகள் வந்துள்ளன. இஸ்ரேலில், 120 உறுப்பினர்களைக் கொண்ட ('நெசெட்' என அழைக்கப்படும்) நாடாளுமன்றத்தில் நெதன்யாகுவின் கூட்டணி 53 இடங்களுடன் மிகப்பெரிய அணியாக இருந்தாலும் அவர் தனது பெரும்பான்மையை இழந்துவிட்டார். அரபுக் கட்சிகள் 19 இடங்களைக் கைப்பற்றி ஒரு முக்கிய சக்தியாக எழுந்து நெதன்யாகுவின் தோல்வியை உறுதி செய்ததுதான், இந்தத் தேர்தலின் மிகவும் குறிப்பிடத்தக்க விளைவாகும். அமெரிக்க இடைக்காலத் தேர்தல்களில், அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளான செனட் (மேலவை), பிரதிநிதிகள் சபை ஆகிய இரண்டிலும் ஜனநாயகக் கட்சியினர் அறுதிப் பெரும்பான்மை பெற்றதன் மூலம், எஞ்சியிருக்கும் பதவிக்காலத்திற்கு டிரம்ப் ஒரு 'பயனற்ற வாத்து' அதிபராகவே இருப்பார். குடியரசுக் கட்சியின் பல பாரம்பரிய கோட்டைகளில் ஜனநாயகக் கட்சியினர் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிகளைப் பெற்றுள்ளனர்; சில இடங்களில், கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு கால குடியரசுக் கட்சியின் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர்.

கடும் வெறுப்புக்குள்ளான தன்னுடைய கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக மக்களிடத்தில் எழுந்த கோப அலையைத் தாமதமாக உணர்ந்த டிரம்ப், இஸ்ரேல் உடனான தனது அரசாங்கத் தொடர்பை விலக்கிக் கொள்வது போல் நடித்தும், ஈரான் போரை முடிவுக்குக் கொண்டுவருவதாக வாக்குறுதி அளித்தும் சேதத்தைக் கட்டுப்படுத்த முயன்றார். மேலும், வாக்காளர் பட்டியலில் முறைகேடுகள் செய்யவும் இலவசங்களை அறிவித்து வாக்குகளை விலைக்கு வாங்கவும் அவர் முயற்சித்தார். ஆனால் எதுவும் பலிக்கவில்லை; அமெரிக்காவின் உழைக்கும் மக்கள் அவருக்கு உரிய பதிலடி கொடுத்து, ஏராளமான முற்போக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இப்போது அமெரிக்காவில் முதல் முஸ்லிம் செனட்டராக அப்துல் எல்-சயீத் மிச்சிகனிலிருந்தும், முதல் கறுப்பினப் பெண் ஆளுநராக கீஷா லான்ஸ் பாட்டம்ஸ் ஜார்ஜியாவிலிருந்தும், முதல் பூர்வகுடி அமெரிக்கப் பெண் ஆளுநராக (நியூ மெக்சிகோவின்) டெப்ரா ஹாலண்ட்டும், முதல் பாலஸ்தீனிய-அமெரிக்க மாநில செனட்டராக அபெர் கவாஸ் நியூயார்க் மாநில செனட் சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் நியூயார்க் (சோஹ்ரான் மம்தானி), சியாட்டில் (கேட்டி வில்சன்), லாஸ் ஏஞ்சல்ஸ் (நித்யா ராமன்), வாஷிங்டன் டி.சி. (ஜெனீஸ் லூயிஸ் ஜார்ஜ்) ஆகிய மாநகரங்களில் நான்கு இளம் சோசலிச மேயர்களை அமெரிக்காவிற்கு வழங்கியது. இந்த மாறிவரும் அரசியல் போக்கு, டொனால்ட் டிரம்ப்பின் இரண்டு ஆட்சி காலத்திலும் காணப்பட்ட தீவிர வலதுசாரி இனவெறி அரசியலையும் இப்போது 'டிரம்பிசம்' என்று அழைக்கப்படும் அரசியல் மற்றும் கொள்கைகளையும் எதிர்த்துத் தோற்கடித்திடும் ஒரு முக்கியமான இடதுசாரி மாற்றத்திற்கான ஆற்றலை வழங்கியுள்ளது. "டிரம்ப்-நெதன்யாகு கூட்டணியால் ஈரான் மீது தொடுக்கப்பட்ட ஆக்கிரமிப்புப் போர், பாலஸ்தீனத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் இனப்படுகொலையின் பேரழிவுத் தாக்கங்களுக்கு (இத்தாக்கங்கள் சர்வதேச அளவில் மட்டுமன்றி, அமெரிக்காவின் உள்நாட்டுப் பொருளாதாரச் சூழலிலும் அரசியல் களத்திலும் கூட உணரப்படுகின்றன) மத்தியிலும் இந்த ஆற்றல் தன்னை அறுதியிட்டுக் கொண்டுள்ளது." குறைந்த ஊதியம், பொது நலத்திட்டங்களுக்கான அரசின் செலவினக் குறைப்பு, அதிகரித்துள்ள ராணுவச் செலவுகள், உயர்ந்து வரும் போர்ச் செலவுகள் ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள கடுமையான விலைவாசி உயர்வும் வாழ்வாதார நெருக்கடிகளும் அமெரிக்க உழைக்கும் மக்களின் வாழ்க்கையை மிகக் கடினமாக்கியுள்ளன.

இருப்பினும் மறுமுனையில், உலகின் முதல் டிரில்லியனராக எலான் மஸ்க் உயர்ந்ததையும் டிரம்ப் நிர்வாகத்திற்கும் அமெரிக்கப் பெருமுதலாளி குழுவினர்களின் பேராசை, கொள்ளை ஆகியவற்றுக்கும் இடையிலான நெருக்கமான ஒருங்கிணைவையும் உருவகப்படுத்துகிற அருவருக்கத்தக்க செல்வக் குவிப்பை, டிரம்பின் 'மாகா' (MAGA) அமெரிக்கா இப்போது கொண்டாடுகிறது. டிரம்ப் நிர்வாகத்தால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள குடியேற்றவாசிகளுக்கு எதிரான இனவெறிப் போர், குடியேறிய சமூகங்களுக்கு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த அமெரிக்க மக்களுக்கும் வாழ்க்கையைப் பாதுகாப்பற்றதாக மாற்றியுள்ளது; அமெரிக்கா அரசின் 'ஐஸ்' (ICE – குடியேற்றம் மற்றும் சுங்க அமலாக்கத் துறை) எந்திரத்தால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பயங்கரவாதம், வன்முறை, இராணுவமயமாக்கல் ஆகியவையே இதற்குக் காரணமாகும். காசாவில் நடக்கும் இனப்படுகொலையையும் இஸ்ரேலால் பாலஸ்தீனம் கொடூரமாக ஆக்கிரமிக்கப்படுவதையும் கண்டிக்கும் பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் செல்வாக்கு செலுத்தும் இஸ்ரேலிய குழுவுடன் (Israel lobby) இணைந்து செயல்படும் டிரம்ப் நிர்வாகத்தின் கோபத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

இந்தப் பின்னணியில், ஜனநாயகக் கட்சி முகாமிற்குள் உள்ள பெரும் பிரிவினர் பைடன் காலகட்டத்தின் திவால்தன்மை, பாசாங்கு, கோழைத்தனத்தைக் கண்டித்து, துணிச்சலான மக்கள் சார்பு செயல்திட்டத்திற்காகப் பணியாற்றி

வருகின்றனர்; இது கோடீஸ்வரர்கள் மீது சொத்து வரி, தொழிலாளர்களுக்கு வாழ்வுதியம், பொது சுகாதாரம், கல்வித் துறையில் கூடுதல் நிதியை, மேம்பட்ட சேவைகளை வலியுறுத்துகிறது. மேலும், வளங்களை விழுங்கி சுற்றுச்சூழலைச் சீரழிக்கும் பிரம்மாண்ட தரவு மையங்களுக்குத் தடை விதிக்கவும் கடுமையான வேலையின்மையையும் அனைத்துத் துறைகளிலும் சீர்குலைவையும் ஏற்படுத்தியுள்ள செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பொறுப்பற்ற பயன்பாட்டிற்குக் கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டுவரவும் இது கோருகிறது. அமெரிக்க மக்கள் வழங்கிய இந்த இடைக்காலத் தேர்தல் தீர்ப்பிற்கு எதிராக எந்தவொரு ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியிலும் ஈடுபட டிரம்ப் ஆதரவாளர்கள் துணியவில்லை; ஆனால் இதை 'வரலாற்றில் ஒரு மாபெரும் பின்னடைவு' என்று வர்ணித்ததன் மூலம், ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள அமெரிக்க நாடாளுமன்ற அவைகளுடன் தனது நிர்வாகம் மோதல் போக்கைக் கடைப்பிடிக்கும் என்பதை டிரம்ப் சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

நெதன்யாகு ஆட்சியின் தோல்வியும் அமெரிக்க இடைக்காலத் தேர்தல்களில் டிரம்ப் நிர்வாகத்தின் பாரிய வீழ்ச்சியும் இந்தியாவில் பெரும் வரவேற்புக்குரிய அதிர்வலைகளை ஏற்படுத்த வேண்டும். அமெரிக்க–இஸ்ரேல் அச்சுக்குத் தனது திட்டமிட்ட வகையிலான அடிபணிதலின் பலிபீடத்தில் இந்தியாவின் நலன்களையும் கண்ணியத்தையும் மோடி அரசாங்கம் பலியிட்டுள்ளது. டிரம்ப், நெதன்யாகுவின் இனவெறி, இஸ்லாமிய வெறுப்பு, சர்வாதிகார மாதிரிகளிலிருந்து சங் பரிவார் கூட்டத்தின் உள்நாட்டு அரசியல் கொள்கைகள் பெருமளவில் கடன் பெற்றுள்ளன. டிரம்பிசத்திற்கு எதிராக அமெரிக்க வாக்காளர்கள் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கிக்கொண்டிருக்கும் இதே வேளையில், மோடியின் பிம்பத்தை உயர்த்துவதற்காக டிரம்ப் நிர்வாகத்திடமிருந்து சமூக ஊடக வாழ்த்துச் செய்திகளையும் தொலைபேசி அழைப்புகளையும் பெறுவதற்கு, மாதம் 2,25,000 டாலர் செலவில் இரண்டு அமெரிக்க தரகு நிறுவனங்களை மோடி அரசாங்கம் பணியமர்த்தியுள்ளது என்பதை நாம் அறிகிறோம்!

டிரம்பின் வரிப் போர், இழிவுமிக்க இந்திய எதிர்ப்புக் கருத்துகள் குறித்த அதிர்ச்சியூட்டும் மௌனமும் அதே டிரம்ப் நிர்வாகத்திடமிருந்து பணம் கொடுத்துப் பாராட்டுகளைப் பெறுவதும் 'விஸ்வகுரு' என்ற வீராப்புக்குப் பின்னால் ஒளிந்துள்ள மோடி அரசாங்கத்தின் பரிதாபகரமான நிலையை வெளிப்படுத்துகிறது. இந்தியாவை அனைத்து முனைகளிலும் ஆழமான பேரழிவுப் பாதையில் தள்ளியுள்ள, டிரம்ப், நெதன்யாகுவின் இந்தக் கோழைத்தனமான இந்தியக் கைப்பாவையை நிராகரிக்க இந்திய மக்களாகிய நாம் இப்போது தயாராக வேண்டும்.

தலையங்கம். எம் எல் அப்டேட் தொகுதி.
29 / எண். 46 தமிழாக்கம்: விஜி

தலையங்கம் தொடர்ச்சி...

நூல் கொள்முதல் ஊழலுக்கு ஜி.ஓ.போட்டாலெல்லாம் உங்க பாவம் போகாது, பெரியார் அறிவுலகத்தில் எல்லா ரேக்கிலும் மகாபெரியவாவின் புத்தகங்களை அடுக்கணும் என்று ஒரு நிகழ்ச்சியில் பேசியுள்ளார். ஒரு நீதிபதி, நடந்துள்ள ஊழலுக்கு காரணமானவர்களைத் தண்டிப்பது பற்றி பேச வேண்டுமேயொழிய, பாவ புண்ணியம் பற்றி பேசுவது சரியல்ல,அதுஜோஸியர்வேலைஎன்றுசிபிஎம்நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் சொன்னார். கடுப்பான நீதிபதி, கம்யூனிஸ்ட் விலை உயர்ந்த உடை உடுத்துகிறார், பென்ஸ் காரில், ரயிலில் ஏசி கோச்சில் போகிறார், இதுவா எளிமை என்று நீதிமன்றத்திலேயே பேசியுள்ளார். இவரின் முற்றும் துறந்த பெரியவாள்கள் மட்டும் நடந்து போகாமல், பல்லக்கிலும் டொயோட்டா காரிலும் போகலாமா? எச்சில் இலையில் புரளச் சொல்வது முட்டாள்தனம் அன்றோ? என எதிர்க் கேள்வி கேட்டால்?! கஷ்டப்பட்டு சம்பாதித்து தன் குடும்பத்தினரைப் பார்க்க எப்போதாவது விமானத்தில் செல்லும் புலம் பெயர் தொழிலாளி ஆடம்பர வாழ்க்கை வாழ்பவரா? எளிமை என்பது ஆடையிலோ பயணத்திலோ கிடையாது. அவரவர் எண்ணத்திலும் செயலிலும்தான் இருக்கிறது. பெரியார் பெயரில் உள்ள நூலகத்தில் மகா பெரியவா புத்தகங்களை அடுக்கி வைக்க வேண்டும் என்று சொல்லும் ஜிஆர்எஸ் போன்றவர்களின் எண்ணம் தெளிவாகவே வெளிப்படுகிறது. ஜிஆர்எஸ் எண்ணத்திலும் செயலிலும் பார்ப்பனியம், மனுநீதி கோலோச்சுவது தெளிவாகவே தெரிகிறது.

1924 ஏப்ரலில் வைக்கம் போராட்டத்தில் இறங்கினார் தந்தை பெரியார். 1925 நவம்பர் 17 அன்று திருவிதாங்கூர் மகாராணியின் உத்தரவின் பேரில் வைக்கம் மகாதேவர் கோயில் நான்கு சுற்றுப்புற வீதிகளும் அனைத்து தரப்பு மக்களுக்கும் திறந்து விடப்பட்டது. இதை பெரியார்தான் செய்தார். பெரியவாள் இல்லை. இன்னும் சொல்லப் போனால், நம்பூதிரிகளை மேல் சாதியினரை சனாதனப் படிநிலையில் உள்ள மற்ற சாதியினர் எவ்வளவு தூரத்தில் நின்று பார்க்க வேண்டும் என்று இருந்ததை உடைத்தது கம்யூனிஸ்ட்டுகளும் பெரியாரும்தான். 1925க்கு முன்பு இருந்ததுபோல் 2025க்குப் பின்னர் வர வேண்டும் என்று விரும்புகிறார்கள் சாமிநாதன்கள்.

'பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும்' இது தவெகவின் தாரக மந்திரம். பெரியார் தவெகவின் கொள்கைத் தலைவர்களில் ஒருவர். ஆனால், பெரியாரின் அறிவுப்புரட்சி நூல்களை எவரும் படித்ததாக தெரியவில்லை! இந்த மரபுக்கும் தவெகவுக்கும் தொடர்பில்லை என்பதை நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன. திராவிட அரசியல் கட்சியினருக்குமே இது பொருந்தும்.

நூல் மோசடிகள் மூலம் இன்றைய ஜென் சிகளையும் எதிர்கால ஜென் சிகளையும் அறிவு மழுங்கச்செய்ய நினைக்கிறார்கள் போலும். இந்தச் சூழலில், தமிழ்நாட்டின் நீண்ட கால அறிவு மரபு, கல்வி மரபை அறிவியல் ரீதியாக மீட்டெடுக்க கல்வியாளர், மாணவர், பண்பாட்டு செயல்வீரர்கள், உழைக்கும் மக்கள் கொண்ட மக்கள் இயக்கம் தேவைப்படுகிறது.

இந்த நூல் மோசடி விசயத்தில் திமுக கடும் எதிர்ப்புப் போராட்டத்தை நடத்த முன் வரவில்லை ஏன்? தவெகதான் ஆட்சியில் இருக்கிறது. பெரியார் நூலகம் விஜயால் திறக்கப்பட்டது. நாங்கள் கொள்முதல் செய்யவில்லை என்று சொல்லும் விஜய், நிர்வாகம் காவல்துறை எல்லாம் தன் கையில் இருக்கும்போது, இந்த நூல் மோசடி, ஊழலுக்குக் காரணமான அதிகாரிகள் மீது, உடந்தையாக இருந்தவர்கள் மீது கடும் நடவடிக்கை வேகமாக எடுப்பதில் என்ன தயக்கம்?



இந்தியாவில் பாசிச அச்சுறுத்தலும் இடதுசாரிகளின் கடமையும்

கேரளா, கோழிக்கோட்டில் அக்டோபர் 31, 2026 அன்று எம்.என்.விஜயன் கலாச்சார மையம் நடத்திய ஆசிரியர் விஜயன் நினைவு கருத்தரங்கத்தில், 'இந்திய பாசிசத்தின் எழுச்சியும் இந்தியா மற்றும் கேரளத்தின் முன்னுள்ள சவால்களும் பற்றி' என்ற தலைப்பில் சிபிஐ(எம்எல்) லிபரேசன் பொதுசெயலாளர் தோழர் திபங்கர் ஆற்றிய உரை - பகுதி I

நண்பர்களே, தோழர்களே,

பேராசிரியர் எம்.என்.விஜயனின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் உங்கள் மத்தியில் உரையாற்றுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். கெடு வாய்ப்பாக, அவரை நேரில் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. இருப்பினும், அவரைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கு நமக்கு நினைவூட்டப்பட்டதைப் போல, அவர் வாழ்வின் இறுதி ஆண்டுகளில், கேரளாவில் இடதுசாரிகளுக்கு இன்னும் பொருளுள்ள எதிர்காலம் பற்றியும் மாற்றம் பற்றியும் சிந்தித்தார். ஒரு சுதந்திரமான, விமர்சனக் குரலாகச் செயலாற்றினார் — அந்தத் தொலைநோக்கு பரந்த இந்திய தேசிய சூழலுக்கும் பொருந்தும் என உறுதியாக நம்புகிறேன்.

ஓர் ஒப்பீட்டைசுருக்கமாகப் பார்ப்போம். 2000-களின் தொடக்கத்தில் மேற்கு வங்கத்தில் தோழர் அசோக் மித்ரா அவர்களின் விஷயத்தில் இதையொத்த ஒரு போக்கையே நாம் கண்டோம் — அவர் 1977-ஆம் ஆண்டு ஜோதி பாசு அரசாங்கத்தின் முதல் நிதி அமைச்சராகப் பணியாற்றிய மார்க்சியப் பொருளாதார நிபுணர் ஆவார். அவரும் 2006-ஆம் ஆண்டு தொடக்கத்தில், இடது முன்னணியின் பல கொள்கைகளை விமர்சிக்கத் தொடங்கினார். குறிப்பாக, சிங்கூரில் நிலம் கையகப்படுத்தப்பட்டதை விமர்சித்தார்.

அசோக் மித்ரா மற்றும் அவரது தோழர்களாலோ அல்லஅடிப்படையில், அசோக் மித்ரா மற்றும் அவரது தோழர்களால் அல்லது இங்கு பேராசிரியர் விஜயனால் முன்னெடுக்கப்பட்ட, ஒட்டுமொத்த விமர்சனமும் — நமது பொருளாதாரக் கொள்கைகளில் அதிகரித்து வரும் நவதாராளமயமாக்கத்தின் தாக்கத்திற்கும் இடதுசாரிகள் அதை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்ற கேள்விக்குமான பதில்தான். நவதாராளமயமாக்கத்திற்கு முன் அடிபணிவது, ஊசலாட்டமான அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத சமரசம் செய்து கொள்வது போன்றவற்றின் அறிகுறிகளைக் கண்டபோதெல்லாம் கவலையடைந்து அந்தப் போக்கின் மீதான தங்களது விமர்சனக் குரலை தொடர்ந்து எழுப்பினர்.

ஓரளவிற்கு நாடாளுமன்ற ஜனநாயகம், நல்வாழ்வு அரசு, கலப்புப் பொருளாதாரம் ஆகியவற்றைக் கொண்ட ஒரே மாதிரியான அரசியல் சூழ்நிலையையே அவர்கள் அனைவரும் பகிர்ந்தனர்; அவையே அன்றைய அடிப்படை நிலைமைகளாகவும் இருந்தன. முழுமையான புரட்சிகர மாற்றம் என்கிற நம்முடைய நோக்கமானாலும் அல்லது இருக்கிற ஆட்சியமைப்பைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்காக அதன் மீது அழுத்தம் கொடுப்ப தானாலும், அடிப்படையான அரசியல் சூழ்நிலை ஒன்றுதான்; அது நாடாளுமன்ற ஜனநாயகம், கலப்புப் பொருளாதாரம், அரசு சார்பு திசைவழி.

1991-இல் தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல் ஆகிய புதிய பொருளாதாரக் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அது முதல் மாற்றத்தைக் குறித்தது. பொருளாதாரக் கொள்கை திடீரென மாறத் தொடங்கியது. அந்த மாற்றத்திற்கு அக்கம்பக்கமாக, 1990-கள் பிற தீவிரக் கொந்தளிப்புகளையும் கொண்டுவந்தன: பாஜக-வின் மூர்க்கத்தனமான எழுச்சி, ஒட்டுமொத்த ராமஜன்மபூமி கிளர்ச்சி. அவை இந்திய அரசியலை மிகப்பெரிய அளவில் உலுக்கின. நாட்டின் நெடுகிலும் ஒரு நிலநடுக்கம் உருவாகிக் கொண்டிருந்தது.

அந்த காலகட்டத்தின் பரவலான சொல்லாடல்களில், 'மண்டல் அரசியல்', 'மந்திர் அரசியல்', 'மார்க்கெட் அரசியல்' என அரசியல் அறியப்பட்டது. எனவே, சந்தையும்

புதிய பொருளாதாரச் சீர்திருத்தங்களும் இந்த அதீத மதவாதத் துருவசேர்க்கையையும் வெறியாட்டத்தையும் மதவெறித்தனத்தையும் இயல்பாகவே கட்டுப்படுத்திவிடும் என்று பலர் நம்பினர். 1990–களின் தொடக்கத்தில் நிலவிய கருதுகோள் அதுவே. 2000–களின் தொடக்கத்தில் எம்.என்.விஜயனும், அசோக் மித்ராவும் முன்வைத்த விமர்சனங்கள், அந்தக் கொள்கைகளின் பத்தாண்டு, இருபதாண்டு அனுபவத்திற்குப் பிறகு வந்தவை. இன்று, 2026–இல், முற்றிலும் புதிய, முன்னெப்போதும் கண்டிராத ஒரு கட்டத்திற்குள் நாம் நுழைந்திருக்கிறோம். அதை 'இந்திய ஃபாசிசம்' என்றே நாம் தெளிவாக அழைக்கவேண்டும்; அது அதற்குக் குறைவானதல்ல.

இந்தியாவில் ஃபாசிசம் இப்போது ஆட்சிக்கு வந்துவிட்டது. ஒரு கருத்தியலாகவும் ஒரு கற்பனைச் சித்திரமாகவும் ஒரு அரசியல் திட்டமாகவும் 1925–இல் ஆர்எஸ்எஸ் உருவாக்கப்பட்டதுடன் அது முதன்முதலில் தலைதூக்கியது. ஆர்எஸ்எஸ் இந்திய விடுதலை இயக்கத்திலிருந்து கிளைத்த ஒன்றல்ல; மாறாக, அது ஹிட்லராலும் ஐரோப்பிய ஃபாசிசத்தின் எழுச்சியாலும் நேரடியாக ஊக்கம் பெற்று, அந்த தேசியவாத மாதிரியையே தனது அடிப்படை வரைபடமாக ஏற்றுக்கொண்டது.

இன்று ஃபாசிசம் ஆட்சிக்கு வந்துவிட்டது என்று நாம் கூறும்போது, ஒரே இரவில் நடந்துவிட்ட ஒன்றாக நாம் அதை அர்த்தப்படுத்தவில்லை. மாறாக, ஒரு நூற்றாண்டு நீண்ட பயணம் அதன் உச்சத்தை – ஒரு முறிவுப் புள்ளியை – எட்டியுள்ளது. அதுவே தீர்க்கமான மாற்றம். ஒருகாலத்தில் வெறும் கருத்தியலாக மட்டுமே இருந்த ஃபாசிசம், இப்போது அரசு அதிகாரத்தையும் கையில் வைத்துள்ளது; அதன் செயல்திட்டங்களை அமலாக்குவதற்கான எந்திரங்களையும் பெற்றுள்ளது. அது துரிதமாகவும் மூர்க்கமாகவும் முன்னேறுமா, அல்லது படிப்படியாகவும் சிறுகச் சிறுகவும் முன்னேறுமா என்பது சூழ்நிலைகளைப் பொறுத்தது. இருப்பினும், அடிப்படையில், அதன் திட்டத்தை ஊக்கமுடன் செயல்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு ஃபாசிச ஆட்சியை நாம் எதிர்கொள்கிறோம்; மேலும், போராடும் ஃபாசிச எதிர்ப்புச் சக்தியாக இடதுசாரிகளின் பங்கை நாம் வரையறுத்தாக வேண்டும்.

இன்று இடதுசாரிகளின் முதன்மையான பொறுப்பு, ஃபாசிச எதிர்ப்புப் போராட்டத்தை தலைமையேற்று நடத்துவதாகும்—இதுவே முதல் பணி. இது ஒரு மிகப்பெரிய மாற்றத்தை பிரதிநிதித்துவப் படுத்துகிறது; ஏனென்றால் இது ஒட்டுமொத்த நமது வரலாற்றில் முன்னெப்போதும் கண்டிராத ஒன்று. 1940–களில் நாம் ஃபாசிசத்தை எதிர்கொண்டபோது, அது ஒரு சர்வதேசச் சூழலுக்குள் இருந்தது; அது ஜெர்மனி, ஸ்பெயின், இத்தாலி, ஐரோப்பா நெடுகிலும் இருந்தது. இந்தியாவில் நாம் ஒரு ஃபாசிச எதிர்ப்புப் பண்பாட்டு, அரசியல் இயக்கத்தைக் கட்டமைத்தோம். இருந்தபோதிலும், நமது சொந்த எல்லைக்குள்ளேயே அரசு அதிகாரத்தை வைத்திருக்கும் ஃபாசிச ஆட்சியை நாம் எதிர்கொண்டிருக்கவில்லை.

இது ஒரு ஆழமான மாற்றம்; மேலும், கேரளாவில் உள்ள உங்கள் அனைவருக்கும் எனது முதல் வேண்டுகோள், இந்த யதார்த்தத்தையே உங்கள் தொடக்கப் புள்ளியாகக் கொள்ளுங்கள் என்பதாகும். ஃபாசிஸ்டுகள் நேரடியாக ஆட்சியில் இல்லாத இந்தியாவின் சில நல்வாய்ப்பான, விதிவிலக்கான மாநிலங்களில் கேரளாவும் ஒன்றாகத் தொடர்கிறது. இங்கே நீங்கள் பாதுகாப்புடன் இருப்பதாக உணரலாம். மிக அண்மைக்காலம் வரை, கேரளா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் தாங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாக நம்பினர்—"ஃபாசிசம் இங்கே நிகழாது. அது குஜராத்தில், டெல்லியில் அல்லது உத்தரப் பிரதேசத்தில் இருக்கலாம். ஆனால், இடதுசாரிகள் வலுவாக இருக்கும் இடத்தில் அல்ல; நமது பண்பாடும் முற்போக்கு பாரம்பரியமும் ஆழமாக வேரூன்றியுள்ள இடத்தில் அல்ல" என்று எண்ணினர். அந்த மாயை மேற்கு வங்கத்தில் மிகக் கொடூரமாகத் தகர்க்கப்பட்டுள்ளது.

மேற்குவங்கத்தில்அதுமுற்றிலும்தகர்க்கப்பட்டுள்ளது. அங்கு சில மாதங்களாக மட்டுமே பாஜக ஆட்சியில் இருந்து வருகிறது; அவர்களால் என்னவெல்லாம் செய்ய முடியும்; அவர்கள் என்ன செய்ய விரும்புகிறார்கள்; அவர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதை ஏற்கனவே நம்மால் நேரில் காண முடிகிறது. பேரழிவும் சூறையாடலும்தான் முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கேரளா அந்த யதார்த்தத்திலிருந்து இன்னும் தொலைவில், இருப்பதாக உணரலாம்; இருந்தபோதிலும், மிகச் சரியாக அதே போக்கு இங்கும் வேரூன்றத் தொடங்கியுள்ளது. ஃபாசிசத்தின் எழுச்சியிலிருந்து இந்தியாவில் எந்த மாநிலமும் தப்பவில்லை. ஒவ்வொரு மாநிலமும் சமூகத்தின் ஒவ்வொரு பிரிவும் நமது இருத்தலின் ஒவ்வொரு அம்சமும் இந்தத் தாக்குதலுக்கு ஆளாகக்கூடியதே.

இந்த யதார்த்தத்தை ஃபாசிசமாக அங்கீகரிக்க பலர் மறுத்துவருகின்றனர். மேலும், அந்த மறுப்பே ஒரு முக்கிய தடையாகும். ஃபாசிசம் இங்கே இருக்க முடியாது என்று நம்புவது ஒரு மனத் தடையாகும். ஃபாசிசம் ஜெர்மனி, இத்தாலியுடன் மட்டுமே அடைபட்டிருந்தது என்றும் ஹிட்லரோடும் முசோலினியோடும் அது இறந்துவிட்டது என்றும் கருதுவது நமது கற்பனை சித்திரத்தின் தோல்வியே — ஃபாசிஸ்டுகளோ அல்லது வரலாறோ எல்லைக்குட்பட்டதல்ல. ஃபாசிசம் வரலாற்றின் ஆழ்ந்த (பக்கங்களின்) உறைவிடத்தில் பூட்டி வைக்கப்பட்டுவிட்டது என்று பலர் கருதினர். ஆனால் சமகால ஃபாசிஸ்டுகள் அதை உருக்கி, மீண்டும் சூடாக்கி, வெவ்வேறு நாடுகளில் புதிதாகப் பரிமாறி வருவதை அவர்கள் காணத் தவறிவிட்டனர்.

ஃபாசிசத்தை வரலாற்று ஜெர்மானிய அல்லது இத்தாலிய மாதிரிகளுடன் மட்டுமே ஒப்பிடுவதும்—இந்தியா அவற்றை நகலெடுக்க முடியாது என்று கருதுவதும்—உண்மையான ஆபத்தைக் காண வைக்காது நம்மைக் குருடாக்கிவிட்டன. இதன் விளைவாக, ஃபாசிசம் இந்தியாவில் பெரும்பாலும் கவனிக்கப்படாமலும் எதிர்க்கப்படாமலும் வளர்ந்தது. அந்தக் கவனக்குறைவால் செழித்தோங்கியது. ஃபாசிசம் முற்றிலும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நெருக்கடியின் விளைபொருள் என்று கருதுவது மற்றொரு பகுப்பாய்வுத் தடையாகும்.

"நம்மிடம் வளர்ச்சியடைந்த முதலாளித்துவம் இல்லை; நமது முதலாளித்துவம் பின்தங்கியது. அதன் நெருக்கடி எப்படி ஃபாசிசத்தை உருவாக்கும்?" என நாம் அடிக்கடி நமக்குள் சொல்லிக்கொள்கிறோம். தீர்க்கமான

விஷயம் என்னவென்றால், ஃபாசிசம் வளர்ச்சியடைந்த முதலாளித்துவத்தின் வெளிப்பாடு மட்டுமல்ல; ஆழமாக வேரூன்றிய நிலப்பிரபுத்துவ எச்சங்களுடன் சேர்ந்தும் அது செழித்தோங்க முடியும். ஃபாசிசத்திற்குத் தேவையான ஒவ்வொரு செய்பொருளும் இந்தியாவில் உள்ளது. சாதிய முறையால் ஒடுக்கப்பட்டவர்களிடமோ அல்லது அம்பேத்கரிய இயக்கத்தில் செயல்படுபவர்களிடமோ நீங்கள் பேசினால், "நீங்கள் இப்போதுதான் ஃபாசிசத்தைக் கண்டு விழித்தெழுகிறீர்கள்; நாங்கள் சாதிய முறை எனும் ஃபாசிசத்தின் கீழ் நூற்றாண்டுகளாக வாழ்ந்துவருகிறோம்" என அவர்கள் சொல்வார்கள். உண்மையில், சாதிய படிநிலை ஒரு ஃபாசிச திட்டத்திற்கு அளவெடுத்துத் தைத்தது போல கச்சிதமாகப் பொருந்தக்கூடியதே.

அவ்விதமே, இன்று ஃபாசிச சக்திகளாக இருப்பவர்கள் யாரென நீங்கள் ஆராய்ந்தால்—பீகார், உத்தரப் பிரதேசம் அல்லது மேற்கு வங்கத்தில்—நிலச் சீர்திருத்தங்களிலிருந்து காயமின்றி தப்பித்த அல்லது தங்களது இழந்த நிலத்தை, சமூக அந்தஸ்தை, அரசியல் ஆதிக்கத்தை மீட்டெடுக்க பழிவாங்கத் தகித்துக் கொண்டிருக்கும் நிலப்பிரபுத்துவ சக்திகளை நீங்கள் காண்பீர்கள். மேற்கு வங்கத்தில் கூட, முதலமைச்சர் வெறும் உள்ளூர் காங்கிரஸ் அரசியல்வாதி அல்ல; 34 ஆண்டுகள் இடது ஆட்சியின் நிலச்சீர்திருத்தங்களின் போதும் அதிகாரம் முழுமையாக அப்படியே நிலைத்திருந்த, ஆழமாக வேரூன்றிய ஒரு குடும்பத்தை அவர் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.

இந்த மட்டுப்படுத்தப்படாத நிலப்பிரபுத்துவ அதிகாரம் ஃபாசிசம் விரிவடைய ஏற்ற வளமான களத்தை வழங்குகிறது. அதற்கு அக்கம்பக்கமாக நவதாராளமயமாக்கல் நிற்கிறது; மேலும் அது அதே காலகட்டத்தில்தான்—1990கள், 2000களின் தொடக்கத்தில்—முன்னேறியது. அப்போது, (அரசு) ஊழியர் இயக்கம், தொழிற்சங்கங்கள், ஆண்டுதோறும் வங்கி, காப்பீட்டு வேலைநிறுத்தங்கள் மூலம், நவதாராளமயமாக்கலின் வேகத்தை குறைக்க முடியும் என்று நாம் நம்பினோம். அதை முழுமையாகப் பின்தள்ள முடியாவிட்டாலும் அதன் தாக்கத்தை வெற்றிகரமாக மட்டுப்படுத்தினோம். மேலும் வர்த்தகம், விவசாயம், தொழிற்துறை, சேவைகள் வங்கித் தனியார்மயமாக்கல் ஆகியவற்றில் நெடுக்காகப் பல நடவடிக்கைகளைப் பின்தள்ளினோம்.

அந்தக் காலம் முடிந்துவிட்டது. அண்மையில் தான், ஐடிபிஐ வங்கி விற்கப்பட்டது. இந்தியா தேசியமயமாக்கப்பட்ட வணிக வங்கிகளை வைத்திருந்த, எச்பிசிஎல் போன்ற பொதுத்துறை (எண்ணெய்) சுத்திகரிப்பு நிலையங்களைக் கட்டிய காலம் அதிகாரப்பூர்வமாக முடிவுக்கு வந்துவிட்டது. இன்று, அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்வதற்காகச் சுத்திகரிக்கப்படுவதற்கு வெளிநாட்டு கச்சா எண்ணெய் ஜாம்நகருக்கு நேரடியாக வருகிறது. அதேவேளையில், அதானி போன்ற பெருநிறுவன குழுமங்கள் உலகளாவிய சந்தைகளுக்கான சுத்திகரிப்பு உள்கட்டமைப்பை உருவாக்கும் பணியை ஏற்கின்றன. நவதாராளமயமாக்கல் இப்போது முற்றிலும் வேறுபட்ட தீவிரத்தன்மையின் மட்டத்தில் இயங்குகிறது. வர்த்தகம், விவசாயத்திற்கு அப்பால், புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் மூலம் தொழிலாளர் சட்டங்கள் முழுமையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இது இந்திய உழைப்பாளர்கள் மீது முழுமையான பெருநிறுவன கட்டுப்பாட்டைக் கொண்டுவருகிறது.

ஃபாசிசத்தின் ஒவ்வொரு செய்பொருளும் இப்போது ஆயத்தமாக உள்ளது. அதனை முன்னெடுப்பவர்கள் அரசு அதிகாரத்தைக் கையில் வைத்துள்ளனர். இடதுசாரிகளுக்குள், நாம் அடிக்கடி ஒரு அதிமுக்கியத்துவம்வாய்ந்த கேள்வியை விவாதிக்கிறோம்: ஃபாசிஸ்டுகள் தேர்தல் மூலம் ஆட்சிக்கு வருகிறார்கள்; ஆனால், அவர்கள் எப்போதாவது தேர்தல் மூலம் வெளியேறுவார்களா? ஒருமுறை வேரூன்றிவிட்டால், தேர்தல் வழியாக வெளியேறும் பாதை இருக்கிறதா? அது இன்னும் விடை காணப்படாத கேள்வியாகவே உள்ளது. முசோலினியும் ஹிட்லரும் அசாதாரண சூழல்களில்—ஒரு உலகப் போர், இராணுவத் தலையீடு, சோவியத் ஒன்றியத்தின் வல்லமை—வீழ்ந்தனர். இது முற்றிலும் வேறுபட்ட ஒரு வரலாற்றுத் திருப்பத்தைக் குறிக்கிறது. சிறிதளவு ஜனநாயகம் எஞ்சியுள்ள, தேர்தல்கள் இன்னும் நடைபெறுகிற இந்தியா போன்ற ஒரு நாட்டில் இப்போது என்ன நடக்கிறது?

2024-இல், ஆளும் ஃபாசிஸ்டுகள் தங்களை நெருங்கிவரும் தோல்வியை உணர்ந்தனர். "இந்த முறை 400-க்கு மேல்" என்று அவர்கள் துணிச்சலாக அறிவித்த பிறகு, விரிவான தேர்தல் முறைகேடுகள் இருந்தபோதிலும் இந்திய மக்கள் அவர்களை 240 இடங்களுக்குச் சுருக்கினர். வழக்கமான போட்டிகளின் மூலம் தங்கள் பிடியை இனி தக்கவைக்க முடியாது என்று உணர்ந்த அவர்கள், வாக்காளர் பட்டியலின் சிறப்பு தீவிர திருத்தத்தையும் (எஸ்ஐஆர்) புதிய தேர்தல் ஆணையச் சட்டத்தையும் அமல்படுத்தினர். எதிர்கால "சாதாரண" தேர்தல்கள் பாஜக-வுக்குத் தொடர்ச்சியான வெற்றிகளை உறுதி செய்யும் வகையில் வடிவமைக்கப்படும்படி, தேர்தல் அமைப்பில் திட்டமிட்ட வகையில் தில்லுமுல்லுகள் செய்யத் தொடங்கினர். தன்னைத்தானே புதுப்பித்துக்கொள்ளும் ஒரு தேர்தல் பொறிமுறையை அவர்கள் வடிவமைத்துள்ளனர்.

நாம் இதை நேருக்குநேர் எதிர்கொள்ள வேண்டிய ஒரு நிலைக்கு வந்துவிட்டோம். நாம் இப்போது கட்டமைத்து வரும் இயக்கமும் நாளை நடத்தவிருக்கும் பேரணியும் வெறுமனே ஒரு தேர்தல் அல்லது சில தனிநபர்களின் வாக்களிக்கும் உரிமையைப் பற்றியது மட்டுமல்ல. 13 கோடிக்கும் அதிகமான—கிட்டத்தட்ட 14 கோடி—மக்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து தன்னிச்சையாக நீக்கப்பட்டுள்ளனர். அந்த நீக்கங்களில் பாதியை புலம்பெயர்வு அல்லது இறப்புகளுக்கானவை என்று நாம் தாராளமாகக் கருதினாலும், குறைந்தது 7 கோடி குடிமக்கள் தவறாக வாக்குரிமையிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். புலம்பெயர் தொழிலாளர்கள், முஸ்லிம்கள், கிராமப்புற ஏழைகள், பெண்கள்—முதன்மையான இலக்குகள் யார் என்பதை நாம் துல்லியமாக அறிவோம்.

இந்தப் போராட்டம் இனிமேலும் தனிநபர் வாக்குரிமைகளை மீட்டெடுப்பது பற்றியது மட்டுமல்ல; இது இந்தியத் தேர்தல் ஜனநாயகத்தின் இருத்தலைப் பற்றியதாகும். வரலாற்று ரீதியாக, இந்திய ஜனநாயகம் அரிதாகவே வாக்குப்பெட்டிக்கு அப்பால் விரிவடைந்தது.

குடிமக்கள் தொடர்ந்து தங்கள் உரிமைகளைப் பயன்படுத்தவும் அரசாங்கங்களைப் பொறுப்பேற்க வைக்கவும் முடிகிற ஒரு உண்மையான 24/7 பங்கேற்பு ஜனநாயகத்தை நாம் ஒருபோதும் அடையவில்லை. அது நிறைவேறாத ஒரு ஏக்கமாகவே இருந்தது. நம்மிடம் ஒரு தேர்தல் ஜனநாயகம் மட்டுமே இருந்தது; அதில், 10, 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு ஒருமுறை—அல்லது மேற்கு வங்கத்தில் இடதுசாரி முன்னணியின் 34 ஆண்டு ஆட்சிக்குப் பிறகும்—வாக்காளர்கள் அவ்வப்போது வாக்குப்பெட்டி மூலம் தங்கள் அரசாங்கத்தை மாற்ற முடிந்தது.

அந்த அடிப்படை வழியும் இப்போது முறிந்துவிட்டது. தேர்தல் அமைப்பு சமரசம் செய்யப்படும்போது, ஆற்றல்வாய்ந்த மக்கள் இயக்கங்களால் மட்டுமே அதை மீட்டெடுக்க முடியும். இனி வருங்காலத்தில், தேர்தலில் வெற்றி பெற விரும்பும் எவரும் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் பாஜக ஏற்கனவே முறைகேடுகள் மூலம் தோல்விகளைத் தடுக்கும் குறைந்தது 30,000 வாக்குகளின் பாதுகாப்பை உருவாக்கியுள்ளது. அவர்களைத் தோற்கடிக்க, 30,000 முதல் 50,000 வாக்குகள் வரையிலான இந்தக் காப்பை முறியடிக்கக்கூடிய ஒரு மகத்தான அரசியல் மாற்றத்தை உருவாக்க வேண்டும். பாரிய வேர்க்கால் மட்ட இயக்கம், அதிதீவிர பொதுமக்கள் அழுத்தம், மாற்றப்பட்ட கள நிலைமைகள் ஆகியவற்றின் சங்கமத்தால் மட்டுமே உண்மையான மாற்றத்தை வழங்க முடியும்.

பாசிசத்தை முடிவில் நாம் எவ்வாறு தோற்கடித்து அகற்றுவது என்பது இன்னும் விடை காணப்படாத சவாலாகவே உள்ளது. அது எவ்வாறு ஆட்சிக்கு வந்தது என்பதை நாம் அறிவோம்; அதன்மூலம் நாம் துன்பத்தை அனுபவித்துள்ளோம்; பொது வாழ்வின் ஒவ்வொரு துறையின் நெடுகிலும் அது தன்னை எவ்வாறு வலுப்படுத்திக்கொள்கிறது என்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆயினும், அதை அகற்றுவதற்கான வரையறுக்கப்பட்ட, முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒரு திட்டவரைபடம் எதுவும் இல்லை. பதில்களை நாமே உருவாக்கியாக வேண்டும். ஒவ்வொரு வழியையும் ஆராய வேண்டும். மேலும் இடதுசாரிகள் அவசரமாக தங்களைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

தொடரும்...

நூல் அறிமுகம் :

அடிமைப் பெண்கள்



பெண்கள் வீட்டிற்குள் முடக்கப்பட்டு பிள்ளைப் பெறும் இயந்திரமாக மாற்றப்பட்ட பின் ஆண்களின் பாலியல் இச்சைகளைத் தீர்க்க, பாலியல் சேவை! செய்ய பெண்களை பல்வேறு பெயர்களில் உருவாக்கினர். போர்களின்போது பெண்களின் மீதான பாலியல் வன்கொடுமைகள், இன்றுவரை தொடர்ந்துகொண்டுதானிருக்கிறது. ஆனால், இரண்டாம் உலகப்போரின்போது ஜப்பான் ராணுவத்தினரின் பாலியல் இச்சைகளை தீர்ப்பதற்காக பெண்களை அடிமைப்படுத்தி, 'சொகுசு நிலையங்கள்' என்ற பெயரில் பாலியல் விடுதிகள் ஜப்பான் பேரரசரின் அரசாணையோடு நடத்தப்பட்டுள்ளது. இது குறித்து 50 ஆண்டுகளுக்குப் பின்னர் பன்னாட்டு சுட வல்லுநர் ஆணையம் மேற்கொண்ட ஆய்வறிக்கையின் வாயிலாகத் தெரியவந்துள்ளது. Comfort Women an unfinished ordeal - Report of a Mission என்ற பெயரில் 1994ல் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையை,"அடிமைப் பெண்கள்- இரண்டாம் உலகப் போரின் கொடூரப் பக்கங்கள்" என்ற பெயரில் தோழர் ஆ.ச.புவனேஸ்வரி சிறப்பான முறையில் தமிழாக்கம் செய்துள்ளார்.

இரண்டாம் உலகப் போரின்போது, ஜப்பானின் ஆளுகைக்குட்பட்ட கொரியா, பிலிப்பைன்ஸ், சீனா, நெதர்லாந்து போன்ற நாடுகளிலிருந்து, பல்வேறு பணிகளுக்காக என்று பெண்களும், பெண் குழந்தைகளும் (13வயது முதல் 30வயது வரை) அழைத்துச் செல்லப்பட்டு அல்லது கடத்தி வரப்பட்டு சொகுசு நிலையங்களில் சிறை வைக்கப்பட்டனர். போதிய உணவு, உடை, இருப்பிடம் என்று எதுவுமின்றி அடி, சித்திரவதை செய்யப்பட்டு ராணுவ வீரர்களுக்கு பாலியல் சேவை செய்ய பலவந்தப் படுத்தப்பட்டனர். சொகுசு நிலையங்களின் வாசலில் ராணுவ வீரர்கள் வரிசையில் நிற்பதும் ஒரே பெண்ணைஒரே நாளில் 20-30 பேர் வன்புணர்வு செய்த கொடுமையும் நடந்துள்ளது. ஒரு லட்சம் முதல் இரண்டு லட்சம் வரை இந்த பெண்களின் எண்ணிக்கை இருக்கலாம் என்று ஆணையம் கருதுகிறது. போரில் ஜப்பான் தோற்று சரணடைந்தபோது ஆயிரக்கணக்கான பெண்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். தப்பியோடியப் பெண்கள் காடுகளில் உணவின்றி மாண்டனர். குற்றுயிரும் குலையுயிருமாய் திரும்பிய பெண்களில் சிலர் தங்களுக்கு நேர்ந்த கொடுமைகளை இந்த அறிக்கைத் தயாரித்தவர்களிடம் கூறியிருக்கின்றனர். இராணுவ வீரர்களின் வாக்குமூலங்கள், ஜப்பானிய அரசாங்கத்தின், அதன் ராணுவத்தின் ஆவணங்கள், சில அதிகாரிகளின் நாள்குறிப்புகள் போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டு இந்த அறிக்கையை பன்னாட்டு சுட வல்லுநர் ஆணையம் தயாரித்திருக்கிறது. ஆணையத்தின் பரிந்துரைகளும், பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகளை பெற்றுத் தருவதற்கான முயற்சிகளும் இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது. இரண்டாம் உலகப்போரின் இதுவரை வெளிவராத உறைய வைக்கும் கொடூரப் பக்கங்களை இந்தப் புத்தகம் அம்பலப்படுத்தியிருக்கிறது. சமூக அக்கறையுள்ள அனைவரும் படிக்க வேண்டிய நூல் இது. சென்னை, விருகம்பாக்கம், நாதன் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. தொடர்புக்கு: 98840 60274 . பக்கங்கள் 278 விலை ரூ.360

– கிருஷ்ணவேணி



எனக்குப் பதவிகள் மீது நாட்டம் இல்லை. ஆனால், நாங்கள் நாடாளுமன்றத்திற்குச் சென்றாலும், நாங்கள் போராளிகள் என்பதை மறக்க மாட்டோம்.

(அகில இந்திய மாணவர் கழக (AISA) தேசியத் தலைவர் தோழர் நேகா, தி வயர் இணைய இதழின் கரன் தாபர்க்கு வழங்கிய சிறப்பு நேர்காணலில் இருந்து)

கரன் தாப்பர்: *நேகா, நீங்கள் ஒரு போராட்டப் பேரணியை நடத்த முயன்றீர்கள். ஆனால் காவல் துறையினர் உங்களைத் தடுக்க தங்களாலான அனைத்தையும் செய்தனர். காவல் துறையினர் நடந்து கொண்ட விதத்தை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?*

நேகா: இந்தப் போராட்டங்களின் மூலம் நாம் காண்பது, வீதிக்கு வந்து போராடக்கூடிய ஒரு புதிய தலைமுறை உருவாகியுள்ளது என்பதை அரசாங்கம் புரிந்துகொண்டுள்ளது. அதனால்தான், ஜனநாயக ரீதியாக போராடும் உரிமையை எங்களுக்கு அளித்தால், நாட்டில் நடக்கும் அநீதிகளுக்கு எதிராகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிக்கு வந்து போராடுவார்கள் என்பதால், எங்களின் ஜனநாயகப் போராட்டங்களைக் கண்டு அரசு பயப்படுவதால், எங்களை 5 நிமிடம் கூட எங்கும் கூடி நிற்க அரசு அனுமதிப்பதில்லை. ஜந்தர் மந்தரை போராட்டக் களமாக நாங்கள் அறிவிக்கவில்லை, அது அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட இடம். ஆனால், இப்போது அந்த இடத்தில் மக்கள் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதை எதிரொலிப்பார்கள் என்று தெரிந்ததும், ஜந்தர் மந்தரில் போராட அரசு தடை விதித்துள்ளது. நகரின் எல்லைகளுக்குச் சென்று போராட வேண்டும் என்கிறார்கள். அரசு அனுமதிக்கும் குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே போராட வேண்டும் என்பது ஜனநாயகப் போராட்டத்தின் நோக்கத்தையே சிதைத்துவிடும்.

காவல் துறையினரால் நீங்கள் இரவு முழுவதும் பல மணி நேரம் காவலில் வைக்கப்பட்டீர்கள். அவர்கள் உங்களை எப்படி நடத்தினார்கள்?

என்னை அவர்கள் தனிமைப்படுத்தி வைத்தனர். ஒரு ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், காவலர்கள் என்னைப் பிற போராட்டக்காரர்களிடமிருந்து பிரித்துச் செல்ல முயன்றபோது, முகமூடி அணிந்த இரண்டு மூன்று பெண்கள் அங்கு வந்தனர். அவர்களை நான் சக மாணவியர் என்றுதான் நினைத்தேன். பின்னர்தான் தெரிந்தது, போராட்டக்காரர்கள் போல வந்து என்னுடன் இருந்தவர்கள் அனைவரும் சாதாரண உடையில் இருந்த பெண் காவலர்கள் என்று! இது அப்பட்டமான ஏமாற்று வேலை. என்னைப் பாலம் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். மாலைக்கு பிறகு ஒரு பெண்ணைக் காவலில் வைக்கக் கூடாது என்று நான் பலமுறை கூறினேன். அவர்கள் கேட்கவில்லை. பின்னர் என்னை ஆர்.கே.புரம் காவல் நிலையத்திற்கு மாற்றினர். எனது பையைச் சோதனையிட்டனர், எனது செல்பேசியைப் பறித்துக்கொண்டனர். வழக்கறிஞரைச் சந்திக்கவோ, பேசவோ என்னை அனுமதிக்கவில்லை. அதிகாலை 2-3 மணியளவில் எனக்கு உடல்நிலை சரியில்லாதபோது மற்றவர்கள் காவல் நிலையத்திற்கு வெளியே வந்து கேட்ட பிறகுதான் எனக்கு மருந்து கொடுத்தனர். சில ஆவணங்களில் கையெழுத்திடும்படி என்னை வற்புறுத்தினர். எனது வழக்கறிஞர் இல்லாமல் நான் எதிலும் கையெழுத்திட மாட்டேன் என்று உறுதியாக மறுத்துவிட்டேன். மாலை 5 மணிக்கு என்னைக் கைது செய்து, மறுநாள் காலை 5:36 மணிக்கு விடுவித்தார்கள்.

கைது வாரண்ட் உங்களிடம் காட்டினார்களா?

இல்லை. "நீங்கள் கைது செய்யப்பட்டுள்ளீர்கள்" என்று பலமுறை கூறினார்கள், ஆனால் எந்தப் பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டேன் என்பதைக் கூற மறுத்துவிட்டார்கள். "உங்களைப் பற்றி ஒரு முடிவு எடுக்கப்பட்டு வருகிறது"

என்று மட்டுமே திரும்பத் திரும்பக் கூறினார்கள். என்னை காவலில் வைத்தது பெரும் அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்தியதால்தான் என்னைக் கைது செய்ய முடியாமல் போனது என நினைக்கிறேன்.

உங்களிடம் அமைதிப் பத்திரத்தில் கையெழுத்திடக் கூறினார்கள். அதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

இது மிகவும் முக்கியமான விஷயம். 'அமைதிப் பத்திரம்' என்ற பெயரில் சமூகச் செயல்பாட்டாளர்கள் இனி எந்தப் போராட்டத்திலும் பங்கேற்கவோ, போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கவோ மாட்டோம் என எழுதி வாங்குவதுதான் இவர்களின் திட்டம். அமைதியான முறையில் போராட அரசியலமைப்புச் சட்டம் எங்களுக்கு உரிமை அளிக்கிறது. ஆனால் "அமைதியை குலைக்க மாட்டேன்" என்று அவர்கள் கூறுவதன் பொருள் என்ன? அபிஜித் தீப்கே தனது வீட்டிற்கு வெளியே தேசிய கொடியை அசைத்ததற்காக அவரை கைது செய்தார்கள். இதில் எங்கு அமைதி குலைந்தது? 'அமைதிப் பத்திரம்' என்பது, ஜனநாயக முறையில் போராடும் உரிமையைப் பறிக்கும் ஒரு தந்திரமாகும்.

டெல்லி உயர் நீதிமன்றம் அசுதோஷ் வழக்கில், ஜென் சி (Gen Z) தலைமுறையினரைப் பிரதிநிதித்துவப்படுத்த உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? ஐரோப்பாவின் வன்முறைப் போராட்டங்களை நீங்கள் பின்பற்றுகிறீர்களா? என்று கேட்டது. இதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

அந்தக் கேள்விகளைக் கேட்டு நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். நாம் ஒரு ஜனநாயக நாட்டில் வாழ்கிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அனைத்து வயதினரையும் பாலினத்த வரையும் சாதி மற்றும் வர்க்கங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். இந்த நாட்டில் உள்ள இளைஞர்களும் மாணவர்களும் ஊழல் மிகுந்த கல்வி அமைப்பால் பாதிக்கப்படும்போது, அவர்களுக்காக நாங்கள் போராடுகிறோம். மாணவர்களுக்காக நாங்கள் போராடும்போது மற்ற வயதினரும் எங்களுக்கு ஆதரவாக நிற்பதை நாங்கள் வரவேற்கிறோம். அதுதான் ஜனநாயகத்தின் அடிப்படை நோக்கமாகும்.

நீதிமன்றம் ஜனநாயகத்தின் தன்மையை தவறாகப் புரிந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. கடந்த சில நாட்களில் காவல் துறையினரின் நடத்தை பற்றி உங்கள் எண்ணம் என்ன?

மண்டி ஹவுஸ் போராட்டத்தில் என்னைக் காவலில் வைத்ததிலிருந்து, சாதாரண உடையில் உள்ள காவலர்கள் என்னைத் தொடர்ந்து பின்தொடர்கிறார்கள். நான் எந்த வாகனத்தில் சென்றாலும் 100, 200 மீட்டர் பின்னால் அவர்கள் வருகிறார்கள். நான் தங்கும் வீடுகளுக்கு வெளியே இரவு பகலாகக் காத்திருக்கிறார்கள். என்னைப் பின்தொடர அவர்களுக்கு யார் உத்தரவிட்டது? யோகேந்திர யாதவ், பிரசாந்த் பூஷண் என போராட்டத்தோடு தொடர்புடைய அனைவருமே காவல் துறையினரால் பின்தொடரப்படுகிறார்கள்.

காவல்துறை மட்டுமல்ல, நாட்டின் பிரதமரும் உங்களையும் உங்கள் தோழர்களையும் 'தேசவிரோதிகள், ஆந்தோலன் ஜீவிகள், அர்பன் நக்ஸல்கள்' என்று குறிப்பிடுகிறார். இதைப் பற்றி...

இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்கள் முட்டாள்கள் என அவர்கள் நினைக்கிறார்கள். 13 கோடி மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதும் தேர்தலில் முறைகேடுகளில் ஈடுபடுவதும் தேசவிரோதம் என்று மக்கள் நினைக்க மாட்டார்கள் என அவர்கள் நம்புகிறார்கள். தலைமைத் தேர்தல் ஆணையரைத் தங்களுக்குச் சாதகமாகச் செயல்பட வைப்பது தேசவிரோதம் இல்லை, ஆனால் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் விதிகளை மீறியதைக் கேள்வி கேட்கும் நாங்கள் தேசவிரோதிகளா? அனைவருக்குமான வாக்குரிமை என்பதுதான் ஒரு ஜனநாயகத்தை உருவாக்குகிறது. ஆனால் யாருக்கு வாக்குரிமை இருக்க வேண்டும் என்பதை அதிகாரத்தில் உள்ளவர்களே முடிவு செய்கிறார்கள்.

பாஜகவின் தேசியத் தொடர்பாளர் பிரதீப் பாரி, 2024-ல் வங்கதேசத்தில் ஷேக் ஹசீனா ஆட்சியைக் கவிழ்த்ததிலிருந்து நீங்கள் ஈர்க்கப்பட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டுகிறார். இந்தியாவில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவர வங்கதேச பாணியிலான ஜென் சி இயக்கத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்கள் என்றும், வன்முறையை உருவாக்க விரும்புகிறீர்கள் என்றும் உங்கள் மீது குற்றம் சாட்டுகிறார்.

முதலில், வங்கதேசப் போராட்டம் பற்றி பாஜக அமைச்சர்களுக்கும் தலைவர்களுக்கும் என்ன தெரியும். அங்கு நடந்த போராட்டத்தில் பல பிரிவினரும் அமைப்புகளும் இருந்தன. சிறுபான்மையினரைப் பாதுகாக்கவும், ஜனநாயகத்தை வலியுறுத்தவும் முற்போக்கான மாணவர் அமைப்புகள் அங்கு போராடின. நான் பேசிய வீடியோ அங்குள்ள 'சோசலிச மாணவர் முன்னணி' என்ற முற்போக்கு அமைப்பிற்கு ஆதரவாக பேசப்பட்டது. ஆனால் வலதுசாரிகள் அந்த வீடியோவைத் திருத்தி, திரித்து வெளியிடுகிறார்கள். வங்கதேசத்தின் வலதுசாரிகளும் இந்தியாவின் வலதுசாரிகளும் ஒன்றுக்கொன்று எதிரிகள் போல் காட்டிக்கொண்டாலும், அவர்கள் நெருங்கிய நண்பர்கள். அராஜகம் பற்றி அவர்கள் பேசுகிறார்கள்! மக்கள் ஜனநாயக ரீதியாகப் போராடுவார்கள் என்பதற்காக, இரவோடு இரவாக ரயில்களை நிறுத்துவதும், டெல்லியில் 57 மெட்ரோ நிலையங்களை மூடிவிட்டு மக்களை முடக்குவதும்தான் அராஜகம். 13 கோடி மக்களின் வாக்களிக்கும் உரிமையைப் பறிப்பதுதான் உண்மையான அராஜகம்.

பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், இந்தப் போராட்டங்கள் திட்டமிட்டு தூண்டப்படுகிறது என்றும், அராஜகத்தைப் பரப்ப தவறான தகவல்களை ஆயுதமாகப் பயன்படுத்துவதாகவும் குற்றம் சாட்டுகிறார். தேசிய நலனுக்கு மேல் அரசியல் நலனை வைப்பதாகவும் அவர் கூறுகிறார். இதற்கு உங்கள் பதில் என்ன?

தேசிய நலன் என்பது பாஜகவின் நலன் என்றே அவர்கள் கருதுகிறார்கள். அதிகாரத்தில் இருப்பதே தங்களின் பிறப்புரிமை என்று அவர்கள் நினைக்கிறார்கள். தேர்தல் ஆணையரைத் தங்கள் சட்டைப் பையில் வைத்துக்கொண்டு, அனைத்து ஜனநாயக அமைப்புகளையும் மிரட்டி, லஞ்சம் கொடுத்து, தங்களுக்குச் சாதகமாகச் செயல்பட வைக்க முடியும் என்று நினைக்கின்றனர். 13 கோடி மக்களின் வாக்குரிமை பறிக்கப்படுவதுதான் உண்மையான தேசிய நலன் சார்ந்த பிரச்சனை.

தலைமைத் தேர்தல் ஆணையர் தன் சக

அதிகாரிகளாலேயே விதிகளை மீறியதாகக் குற்றம் சாட்டப்படுவதுதான் தேசிய நலன் சார்ந்த மிகப்பெரிய பிரச்சனை.

வெளிநாட்டு நிதி' உதவியுடன் நீங்கள் செயல்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு பற்றி ?

உண்மையில் வெளிநாட்டு நிதியுதவியைப் பெறுபவர்கள் பாஜகவினர்தான். தேர்தல் பத்திரங்கள் மூலமாக, பல்வேறு வெளிநாட்டு அமைப்புகள் மூலமாக அவர்களுக்கு எவ்வளவு நிதி வருகிறது என்பது எல்லாருக்கும் தெரியும். இஸ்ரேல் அரசுடன் அவர்களுக்கு உள்ள உறவும் நமக்குத் தெரியும். தங்களுக்கு எதிராகக் கருத்து தெரிவிக்கும் அனைவரையும் தேசவிரோதிகள் என்று முத்திரை குத்துவது அவர்களுக்கு வாடிக்கையாகிவிட்டது. ஹிண்டன்பர்க் அறிக்கை பற்றிப் பேசினாலும் தேசவிரோதம் என்கிறார்கள். ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் அவர்கள் எதாவது ஒரு பெயரிட்டு முத்திரை குத்துகிறார்கள், எனவே அவர்களின் முத்திரைகளை மக்கள் இப்போது பொருட்படுத்துவதில்லை.

ஜார்ஜ் சொரெஸ் (George Soros) இந்தப் போராட்டங்களுக்கு எந்த வகையிலாவது நிதி உதவி செய்துள்ளாரா? அவரது பணம் இந்தப் போராட்டங்களைத் தூண்டுகிறதா?

எனக்குத் தெரியாது. நாங்கள் போராட்டப் பதாகைகளை அச்சிட்டதற்கு இன்னும் 50,000 ரூபாய் கடன் உள்ளது. ஜார்ஜ் சொரெஸ் எங்கள் கடனை அடைத்தால் நான் மிகவும் நன்றியுள்ளவளாக இருப்பேன். எனவே இது முற்றிலும் பொய்யான குற்றச்சாட்டு.

ஜூலை மாதம் நீட் (NEET) விவகாரத்திற்காகப் போராடியபோது உங்களுக்குப் பெரும் ஆதரவு இருந்தது. அது நாடு முழுவதும் உள்ள இளைஞர்களைப் பாதிக்கும் பிரச்சனை. ஆனால் இப்போது தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் விவகாரம் என்பது சற்று சிக்கலான. நேரடியாக தொடர்பில்லாத விவகாரம். இதற்கும் முன்பு இருந்த அதே அளவிலான ஆதரவு உங்களுக்கு இருப்பதாக நம்புகிறீர்களா?

இந்த முறை எங்களுக்கு இன்னும் அதிகமான ஆதரவு இருப்பதாகவே நான் நினைக்கிறேன். மக்கள் பாஜகவின் ஆட்சியின் கீழ் தாங்கள் உணரும் துயரத்தை வெளிப்படுத்த நீண்ட நாட்களாகக் காத்திருக்கிறார்கள். தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்ததன் மூலம் எங்களால் தெருவிற்கு வந்து போராட முடியும், வெற்றிபெற முடியும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது. போராட்டக்காரர்கள் மீது காவல் துறையினர் நடத்தும் கொடூரமான தாக்குதல் வீடியோக்களை மக்கள் சமூக ஊடகங்களில் பார்க்கிறார்கள். இருந்தும் அடுத்த நாள் அதே மக்கள் தெருவுக்கு வந்து போராடத் துணிகிறார்கள்.

அப்படியானால் போராட்டக்காரர்களுக்கு அனுதாபமும் ஆதரவும் வளர்ந்து வருகிறது. பல சந்தர்ப்பங்களில் காவல் துறையினரின். அரசாங்கத்தின் நடவடிக்கைகளே உங்கள் ஆதரவு பெருகுவதற்குக் காரணமாக அமைந்திருக்கிறது என்கிறீர்களா?

ஆம், அனுதாபம் ஆதரவு மட்டுமல்ல, நான் எல்லா இடங்களிலும் துணிச்சலைப் பார்க்கிறேன். இத்தனை காலம் பயந்து அடங்கிக் கிடந்த மக்கள் இப்போது துணிச்சலாகப் பேசுகிறார்கள். ஜனநாயகத்தைக் காக்க மக்கள் எந்த அளவிலான வன்முறையையும் தங்கள் உடல்கள் மீது தாங்கிக்கொள்ளத் தயாராக இருப்பது ஆச்சரியமளிக்கிறது.

ஞானேஷ் குமார் ராஜினாமா செய்வதற்கான எந்த அறிகுறியும் இல்லை. அரசாங்கமும் அவரைப் பாதுகாக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது. எனவே இந்தப் போராட்டங்கள் எவ்வளவு காலம் தொடர முடியும்? பண்டிகைக் காலம். சோர்வு ஏற்பட்டு போராட்டங்கள் வலுவிழக்கும் என்று நீங்கள் கவலைப்படுகிறீர்களா?

இந்தப் போராட்டங்கள் வலுவிழக்கும் என்று நான் நினைக்கவில்லை. பண்டிகைகள் வருவது உண்மைதான், ஆனால் அரசாங்கம் சரியாகச் செயல்படாததால், ஜனநாயக ரீதியாகப் போராடும் உரிமையை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் புரிந்துகொள்ள மக்கள் ஆர்வமாக உள்ளனர். நாட்டில் நடக்கும் அநீதிகளுக்கு எதிராகப் போராட மக்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. இப்போது எதிர்க்கட்சிகளும் தங்கள் தாமதத்தை உணர்ந்து தெருவுக்கு வந்து போராடத் தொடங்கியுள்ளன.

நரேந்திர மோடி அரசாங்கத் தலைவராக 25 ஆண்டுகள் நிறைவு செய்வதை பாஜக கொண்டாடுகிறது. குஜராத் முதல்வராகவும். தற்போது இந்தியாவின் பிரதமராகவும் நரேந்திர மோடியை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?

இவருடைய வரலாறும் இவருடைய அரசியல் பின்னணியும் எங்களுக்குத் தெரியும். அவர்கள் என்ன செய்கிறார்கள், ஏன் செய்கிறார்கள் என்பதும் குஜராத்தில் அவர் என்ன செய்தார் என்பதும் எங்களுக்குத் தெரியும். 2002 குஜராத் வன்முறையில் அவரது பங்கின் காரணமாக, நீண்ட காலமாக அமெரிக்கா அவருடன் எந்த உறவும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை... தலித்துகள், முஸ்லிம்கள், பெண்கள் என இந்நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவதும் வன்முறையை விரும்புவதுமே பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் அமைப்புகளின் அரசியல் பணிகளில் ஓர் அங்கமாக இருந்து வருகிறது. நரேந்திர மோடி இந்த அமைப்புகளின் அரசியல் முகம். இந்த வன்முறையின் முகமாக, ஒட்டுமொத்த வெறுப்பு மற்றும் பாகுபாட்டு பிரச்சாரத்தின் முகமாக, நாட்டின் அனைத்துப் பொதுத்துறை நிறுவனங்களையும் தனியாருக்கு விற்ற முகமாக, ஜனநாயகம் என்றால் என்ன என்பதை மறக்கடிக்கச் செய்யும் முகமாக, ஜனநாயகத்தில் இருந்து எதேச்சதிகாரத்தை நோக்கித் தள்ளப்படும் ஒரு நாட்டின் முகமாகவே நான் அவரைப் பார்க்கிறேன்.

கருத்துக்கணிப்புகளின்படி நரேந்திர மோடி மிகவும் பிரபலமான பிரதமராகத் தொடர்கிறார். 2029-லும் பாஜக வெற்றி பெறும் என அமித்ஷா பெருமையடித்துக் கொள்கிறார். மோடி உங்கள் தலைமுறையினரிடையே கருத்துக் கணிப்புகள் கூறுவது போல் இன்னும் பிரபலமாக இருக்கிறாரா? அவர்களின் இந்த நம்பிக்கை தவறானதா?

இந்தக் கருத்துக்கணிப்புகள் அனைத்தும் பாஜக மற்றும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பால் நிதியளிக்கப்படுபவர்களால் நடத்தப்படுபவை. அவர்கள் நிதியளிக்கும் ஊடகங்களில் அதை வெளியிடுகிறார்கள். மோடி எவ்வளவு பிரபலமானவர் என்பதை அறிய நாம் சமூக வலைதளங்களைப் பார்த்தால் தெரியும். அங்குதான் அதிகாரத்தில் உள்ளவர்களைப் பற்றி மக்கள் பகிரும் மீம்ஸ்கள், நகைச்சுவைகள் மற்றும் விமர்சனங்கள் அதிகம் காணப்படுகின்றன.

நரேந்திரமோடியை மதிப்பிடுவதில் சமூக ஊடகங்களே இந்தியாவின் உண்மையான குரல் என்று

சொல்கிறீர்களா?

ஆம், கருத்துக்கணிப்புகள் நேர்மையாக நடத்தப்பட்டால் நம்பலாம், ஆனால் அவை அப்படி நடத்தப்படுவதில்லை.

நீங்கள் ஒரு மாணவர் தலைவரில் இருந்து தேசிய அளவிலான போராட்டத்தின் மிக முக்கியமான, பலராலும் போற்றப்படும் முகமாக மாறியுள்ளீர்கள். இது உங்களுக்குப் பயமாக இருக்கிறதா அல்லது உற்சாகமாக இருக்கிறதா?

இது எனக்கு மிகவும் சோர்வளிக்கிறது. அவமானம், வன்முறை, ஏமாற்றம் நிறைந்த வாழ்க்கையில் மக்கள் நம்பிக்கையைத் தேடுகிறார்கள். அதனால் அவர்கள் ஒரு சாதாரண மனிதரை அடையாளமாக மாற்றுகிறார்கள் எனப் புரிகிறது. ஆனால், தனிப்பட்ட முறையில் இது எனக்கு மிகவும் சோர்வைத் தருகிறது. சாலையில் செல்லும்போது யாராவது என்னைப் பார்த்தால், என்னை அபிமானத்துடன் பார்க்கிறார்களா, அல்லது நான் பயப்பட வேண்டுமா, அல்லது அவர் டெல்லி காவல் துறையைச் சேர்ந்தவரா என்ற இந்தப் புதிய பயம்... எனக்குள் உள்ளது.

உங்களுடன் நேர்காணல் என்றவுடன், உங்கள் மன உறுதியையும் தைரியத்தையும் பாராட்டினார். ஒருவர், "அவர் எல்லா இடங்களிலும் இருக்கிறார். அவருக்கு எங்கிருந்து இவ்வளவு ஆற்றல் கிடைக்கிறது?" என்று கேட்டார். எங்கிருந்து வருகிறது இந்த ஆற்றல்?

மற்றவர்களுக்கு இது புதிதாகத் தெரியலாம், ஆனால் எனக்கும் என் அமைப்பில் உள்ள அனைவருக்கும் இது புதிதல்ல. நாங்கள் எப்போதும் இதைத்தான் செய்கிறோம். இந்த ஆற்றல் உணவிலிருந்தோ ஒரு நபரிடமிருந்தோ வரவில்லை. மாற்றத்திற்கான காலம் நெருங்கிவிட்டது என்ற எண்ணத்திலிருந்தே இந்த ஆற்றல் வருகிறது. பயம் மற்றும் ஏமாற்றத்தைத் தாண்டி, ஒரு மாபெரும் ஜனநாயக அமைப்பு தழைத்தோங்க வேண்டும் என்ற உந்துதல் தான் எங்களை இயக்குகிறது. இந்தப் போராட்டம் நசுக்கப்பட்டுவிடக் கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

கடைசிச் கேள்வி. உங்களுக்கு 29 வயதாகிறது. அடுத்த 10 ஆண்டுகளில் நீங்கள் ஒரு எம்.எல்.ஏ அல்லது எம்.பி ஆக விரும்புகிறீர்களா? நீங்கள் அரசாங்கத்தின் ஒரு அங்கமாக இருக்க விரும்புவீர்களா? அரசியலை உங்கள் தொழில் வாழ்க்கையின் மையமாகக் கொள்ள விரும்புகிறீர்களா?

அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. இந்த நாட்டில் எந்த ஒரு நல்ல மாற்றமும் நாடாளுமன்றத்திற்கு உள்ளே நடக்கவில்லை, தெருக்களில் நடக்கும் போராட்டங்கள் மூலமாகவே நடந்துள்ளது. விவசாயச் சட்டங்கள் திரும்பப் பெறப்பட்டதும் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்ததும் தெருக்களில் நடந்த போராட்டங்களால்தான். தொழிலாளர் உரிமைகள், பெண்கள் உரிமைக்கான போராட்டங்களும் களத்தில்தான் நடந்துள்ளன. அதனால் நான் நாடாளுமன்றப் பதவிகளைப் பெரிதாகக் கருதவில்லை.

நீங்கள் ஒரு நாடாளுமன்றவாதியாக இருப்பதை விட ஒரு வீதிப் போராளியாக இருக்கவே விரும்புகிறீர்கள்...

ஆம், எனக்குப் பதவிகள் மீது நாட்டம் இல்லை. ஆனால் நாங்கள் நாடாளுமன்றத்திற்குச் சென்றாலும், நாங்கள் போராளிகள் என்பதை மறக்க மாட்டோம். ஒரு எம்.பியாக இருப்பதென்பது சொகுசான பிளாட், ஏசி கார் மற்றும் சம்பளம் வாங்கி வாழ்வது அல்ல; தங்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்காக இன்னும் அதிகமாகப் போராடுவதையே அது கோருகிறது. ❐









இடதுசாரி கட்சிகளின் கூட்டு அறைகூவல் வெளியீடு

இடதுசாரி கட்சிகளின் கூட்டு அறைகூவல் வெளியிடும் நிகழ்வு நவம்பர் 10 அன்று மாலை சென்னை சர்.பிட்டி.தியாகராயர் அரங்கில் நடைபெற்றது. சிபிஐ(எம்) தென் சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் வேல்முருகன்நிகழ்ச்சிக்குதலைமைதாங்கினார்.சிபிஐ(எம்) மாவட்டச் செயலாளர்கள் எம்.ராமகிருஷ்ணன், ஜி.செல்வா, சிபிஐ மு.வரதன், த.கு.வெங்கடேஷ், சிபிஐ(எம்எல்) விடுதலை எம்.மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிபிஐ(எம்) மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், சிபிஐ மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், சிபிஐ(எம்எல்) விடுதலை மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி மற்றும் கூட்டறிக்கை தயாரிப்புக் குழு உறுப்பினர்கள் சிபிஐ(எம்எல்) விடுதலை சந்திரமோகன், சிபிஐ(எம்) குணசேகரன், சிபிஐ வஹிதா நிஜாம் உள்ளிட்ட தலைவர்கள் இந்தக் கூட்டு அறைகூவலை வெளியிட்டு உரையாற்றினர். சிபிஐ(எம்எல்) விடுதலை சென்னை மாவட்டச் செயலாளர் என்.ஜேம்ஸ் நன்றி கூறினார்.

கார்ப்பரேட் நவதாராளமயக் கொள்கைகளும், மதவெறி பாசிச சக்திகளும் உழைக்கும் மக்களின் வாழ்வையும் ஜனநாயகத்தையும் சூறையாடி வரும் சூழலில், தமிழ்நாட்டு மக்களிடம் இடதுசாரி மாற்றை முன்வைத்து, மக்கள் இயக்கத்தைக் கட்டமைக்க இந்த அறைகூவல் அழைப்பு விடுத்துள்ளது.

இடது ஒருங்கிணைப்புக் குழு "ஒரு வரலாற்றுத் தேவை"

ஜனநாயக சக்திகளின் வேண்டுகோள், கம்யூனிஸ்ட் கட்சிகளின் தொடர் விவாதங்களின் தொடர்ச்சியாக அமைந்துள்ள இந்த ஒருங்கிணைப்புக் குழு "ஒரு வரலாற்றுத் தேவை" என அறைகூவல் கூறுகிறது. மக்கள் விரோதப் பொருளாதாரக் கொள்கைகளின் பாதிப்பும், மாற்றம்தேவை என்ற மக்கள் மனநிலையும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள தமிழகச் சூழலில், இடதுசாரி மாற்றுக்கான தேவை அதிகரித்துள்ளது. தற்காலிகத் தேர்தல் லாபத்துக்காகக் கொள்கைச் சமரசம் செய்யாமல்,கருத்தியல் ரீதியாகவும் களத்திலும் தொடர்ந்து நிற்பவர்கள் இடதுசாரிகள் மட்டுமே என்றும் அது குறிப்பிடுகிறது.

முதல் மே தினம் சிங்காரவேலரால் கொண்டாடப்பட்டதும், கோவை சின்னியம்பாளையம் தியாகிகள், சேலம் சிறைசாலைப் படுகொலை, கீழ்வெண்மணி என தியாகங்களால் எழுதப்பட்ட வரலாற்றையும்; நில உச்சவரம்புச் சட்டம், குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், 8 மணி நேர வேலை, 'தமிழ்நாடு' பெயர், மொழிவாரி மாநிலம் ஆகியவற்றில் செங்கொடி இயக்கத்தின் பங்கையும் அறைகூவல் நினைவுகூர்கிறது. தமிழ்நாடு அரசாங்கத்தின் செயல்பாடுகள் குறித்த இடதுசாரிகளின் அணுகுமுறை உழைக்கும் மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டே அமையும் என்றும் தெளிவுபடுத்துகிறது. பாலஸ்தீனம், ஈரான் என உலகின் பல நாடுகளில் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய சக்திகள் நடத்தும் ஆக்கிரமிப்புப் போர்களுக்கு எதிராகவும், அமெரிக்காவிடம் சரணடையும் ஒன்றிய பாஜக அரசாங்கத்தின் அயலுறவுக் கொள்கைக்கு எதிராகவும் இடதுசாரிகள் தொடர்ந்து குரல் கொடுப்பார்கள் என்றும் அறைகூவல் உறுதியளிக்கிறது.

முக்கிய அம்சங்கள்:

அரசு நிர்வாகம்: அரசு நிர்வாகத்தைப் பொறுத்தவரை அரசியல் சாசன விழுமியங்கள், மாநில உரிமைகள் பாதுகாப்பு; ஆளுநரைக் கருவியாக்கும் ஒன்றிய அரசின் தாக்குதல்களை முறியடித்தல்; இந்தி – சமஸ்கிருதத் திணிப்பை எதிர்த்தல்; நிர்வாகம், நீதித்துறையில் தமிழ்மொழி ஆகியவற்றை முன் வைக்கிறது.

பொருளாதாரம்: தனியார்மயத்தை எதிர்த்து; நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை ரத்து செய்ய; பெரும் பணக்காரர்கள், கார்ப்பரேட்டுகளுக்குக் கூடுதல் வரி விதிப்பு ஆகியவற்றிற்காகப் போராட உறுதியேற்றுள்ளது.

வேலைவாய்ப்பு: விபி–கிராம்–ஜி திட்டத்தை ரத்து செய்து, மகாத்மா காந்தி ஊரக வேலைத்திட்டத்தை மீட்டு ஆண்டுக்கு 200 நாள் வேலை, நாளொன்றுக்கு ரூ.700 கூலி; நகர்ப்புறங்களுக்கு விரிவாக்கம்; குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ.42,000; அரசுக் காலிப்பணியிடங்களை நிரப்புதல்; ஒப்பந்த முறை ஒழிப்பு; தூய்மைப் பணி தனியார்மயத்துக்கு எதிர்ப்பு; இளைஞர்களுக்கு வேலையில்லாக் கால நிவாரணம் ஆகியவற்றை முன்வைக்கிறது.

சிறு, குறு தொழில்கள்: வட்டி மானியம், மின் கட்டண உயர்வு ரத்து, ஜிஎஸ்டி குறைப்பு; கைத்தறி, கயிறு உள்ளிட்ட பாரம்பரியத் தொழில்களுக்குப் பாதுகாப்பை வலியுறுத்துகிறது.

வேளாண்மை, நிலம்: சுவாமிநாதன் குழுப் பரிந்து ரைப்படி குறைந்தபட்ச ஆதரவு விலைக்குச் சட்டம்; சிறு, குறு விவசாயிகள் கடன் தள்ளுபடி; உபரி, புறம்போக்கு நிலப் பகிர்வு; பஞ்சமி நில மீட்பு; குடிமனைப் பட்டா

கோரிக்கைகளை முன் வைத்துள்ளது.

சமூகநீதி: சாதி ஆணவக் கொலைகளைத் தடுக்கத் தனிச் சட்டம்; தனியார் துறையில் இடஒதுக்கீடு; பெண்களுக்கு மாதம் ரூ.2,500 உரிமைத் தொகை; வருமானமற்ற முதியோர் அனைவருக்கும் ஓய்வூதியம்.

கல்வி, மருத்துவம், சுற்றுச்சூழல்: தேசியக்கல்விக் கொள்கை நிராகரிப்பு; நீட், கியூட் தேர்வு ரத்து; கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றுதல்; அரசு மருத்துவமனைகளை வலுப்படுத்துதல்; மணல், கனிம வளங்களை அரசின் நேரடிக்கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

சோசலிச இலக்கை நோக்கி முன்னேறுவோம்:

மதச்சார்பின்மை, ஏகாதிபத்திய எதிர்ப்பு, கூட்டாட்சி, சிறுபான்மையினர் பாதுகாப்பு ஆகிய தளங்களில் வலதுசாரி இந்துத்துவ சக்திகளை வீழ்த்த, ஜனநாயக சக்திகளை அணிதிரட்டவும் மாநிலந்தழுவிய பிரச்சினைகளில் செயல்திட்ட அடிப்படையில் ஒருங்கிணைந்து களத்தில் இறங்கவும் ஒருங்கிணைப்புக் குழு திட்டமிடும். கேரளம், மேற்கு வங்கம், திரிபுராவில் இடதுசாரி அரசாங்கங்கள் நிறைவேற்றிய நிலச்சீர்திருத்தம், அதிகாரப் பரவல், மக்கள் நலத் திட்டங்கள் பிற மாநிலங்களுக்கே முன்னோடியாக விளங்குவதைச் சுட்டிக்காட்டும் அறைகூவல், "இடதுசாரிகள் வார்த்தைகளால் மட்டுமல்ல, வரலாற்றுச் சாதனைகளாலும் நிகரற்றவர்கள்" என்று முழங்குகிறது. "எல்லோரும் எல்லாமும் பெறுகிற சோசலிச இலக்கை நோக்கி முன்னேறுவோம்" என்ற அழைப்பையும் விடுத்துள்ளது.

இகக(மாலெ) விடுதலை தமிழ்நாடு மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி பேசும் போது,

'நமது இந்த இடதுசாரி கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழு உருவாக்கம் பற்றி, இந்தக் கூட்டு அறைகூவலிலே முதல் பக்கத்திலேயே "அது ஒரு வரலாற்றுத் தேவை" என்று மிகச் சரியாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

பெரியார் அறிவுலகத்திற்கு புத்தகங்கள் வாங்குவதில் கேடு கெட்ட செயலைச் செய்துள்ளார்கள். அச்செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

மிகவும் கொந்தளிப்பான, மிகவும் நெருக்கடியான ஒரு சூழலிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இடதுசாரிகள் நாம், மக்கள் போராட்டங்களிலிருந்து உத்வேகம் பெற்றோம். சுதந்திரப் போராட்டத்திலிருந்து உத்வேகம் பெற்றோம். ஆனால் இன்றைக்கு ஆட்சியில் இருக்கிற பாசிஸ்டுகள் ஹிட்லரிடமிருந்தும் முசோலினியிடமிருந்தும் பெற்றார்கள். அந்த ஹிட்லரும் முசோலினியும் என்ன ஆனார்கள் ?

தேர்தல் மூலமாகவும் அதிகாரத்திற்கு பாசிசம் வரும். ஆனால் அந்தத் தேர்தலின் மூலமாக மட்டுமே பாசிசத்தை நாம் அப்புறப்படுத்தி விட முடியாது. பாசிசம் இந்திய தேசத்தில் இருக்கிற அரசியலமைப்புச் சட்டம், முற்போக்கு விழுமியங்கள், ஜனநாயகம் அனைத்தையும் அழித்தொழிப்பதற்காக தன்னை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறது. இடதுசாரிகள் நாம் முதலாளித்துவ சங்கிலியினுடைய பலவீனமான கண்ணியைப் பார்த்து அங்கு அடிக்க வேண்டும். மோடி இன்றைக்குப் பலவீனம் அடைந்திருக்கிறார். அதனால் எஸ்ஐஆர் கொண்டு வந்து, 13 கோடியே 30 லட்சம் பேரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கியிருக்கிறார். இந்தியா முழுவதும் இருக்கிற எல்லா மக்களும் எழுந்து நின்று போராடுகிற மிகப்பெரிய போராட்டமாக எஸ்ஐஆர்-க்கு எதிரான, வாக்குத் திருட்டுக்கு எதிரான போராட்டம் மாறியிருக்கிறது. அதற்கான வேலைகளை இடதுசாரிகள் நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

இந்தியாவில் மிகப்பெரிய ஆபத்து, முதன்மையான ஆபத்து, பேராபத்து, மக்களுக்கு எதிரான ஆபத்து பாசிசம். பாசிசத்திற்கு முதலில் முடிவு கட்டவேண்டும். அந்த கடமையை, பொறுப்பை உணர்ந்து நாம் வேலை செய்ய வேண்டும்' என்றார்.

சிபிஐ(எம்எல்)விடுதலை மத்திய கமிட்டி உறுப்பினர் சந்திரமோகன் தமது உரையில்:–

இன்றைய தமிழ்நாட்டு அரசியல் சூழலில், இடதுசாரி கட்சிகளின் ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் பெரும் மாற்றங்களை சந்தித்துக் கொண்டு இருக்கிறது. இடது அரசியல் நோக்கி மாற்றம் நடக்கிறது. இவை, இன்றைய முதலாளித்துவ சமூகப் பொருளாதார அமைப்புக்கு மாற்று சோசலிசம் தான்! என்பதை உறுதி செய்கிறது. 'தமிழ்நாடு இனி இடதுபக்கம்!' என்றடிப்படையில், இடதுசாரி ஒருங்கிணைப்பு குழுவின் கூட்டு அறைகூவலை இன்று நாம் இங்கு வெளியிட்டுள்ளோம். எதிர்வரும் டிசம்பர் 2026, சனவரி 2027 : திருநெல்வேலி, மதுரை, திருவாரூர், கடலூர், கோவை, சேலம் ஆகிய 6 மண்டலங்களில், கூட்டு அறைகூவல் விளக்க மண்டல கருத்தரங்குகள் நடைபெற உள்ளன. அறைகூவலின் செய்தியை கட்சி தோழர்களிடமும், மக்களிடமும் எடுத்துச் செல்ல வேண்டும். நிறைவாக 2027ஆம் ஆண்டு மார்ச் 23ல் திருச்சியில் இலட்சக்கணக்கானோர் பங்கேற்கும் மாபெரும் பேரணியை நடத்தவுள்ளோம்.

தமிழ்நாடு எதிர்கொண்டுள்ள அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுச் சவால்களை எதிர்கொள்ள இந்த முன்னெடுப்பு களத்தின், காலத்தின் தேவையாக உள்ளது.

விடுதலைக்குப் பிறகு தமிழ்நாட்டில் இடதுசாரிகளே பிரதான எதிர்க்கட்சியாக இருந்தனர். இடதுசாரிகளின் வர்க்க போராட்டக் களமாகத்தான் தமிழ்நாடு இருந்துள்ளது. தொழிலாளர் போராட்டங்கள், சவுக்கடி சாணிப்பால் பண்ணையடிமைக் கொடுமைகளுக்கு எதிரானப் போராட்டங்கள், ஏழை குத்தகை விவசாயிகள், சிறுகுறு விவசாயிகளின் நிலவுரிமைக்கானப் போராட்டங்கள் என அனைத்தையும் கட்டமைத்தது இடதுசாரிகள்தான். தொழிலாளர்களுக்கான 8 மணி நேர வேலை, சங்கம் அமைக்கும் உரிமை ஆகியவற்றை வென்றெடுத்தது, கூலி உயர்வு, குத்தகை விவசாயிகள் பாதுகாப்பு, நில உச்சவரம்புச் சட்டம், குடியிருப்போர் உரிமைச் சட்டங்கள்.... அனைத்தும் இடதுசாரிகள் சட்டமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நடத்திய சமரசமற்ற வர்க்கப் போராட்டங்களின் மூலமே சாத்தியமாகின. இன்றுவரையும் நாம்தான் உழைக்கும் மக்களின் உரிமைக்கான போராட்டக் களங்களில் உள்ளோம். ஆனால், அரசியல் களத்தில் சுமார் 60 ஆண்டுகாலம் இருபெரும் திராவிட கட்சிகள் திமுக, அதிமுக ஆகியவை தமிழ்நாடு அரசியலில் ஏகபோக ஆதிக்கம் செலுத்தின. புதியதாக ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது தவெக. இவர்கள் யாருக்காக ஆட்சி செய்கிறார்கள்? திமுக,

அதிமுக ஆட்சிகளில்... தொழிலாளர் போராட்டங்கள் நசுக்கப்பட்டன. கார்ப்பரேட் பெருந்திட்டங்களுக்காக நிலங்கள் கையகப்படுத்த அடக்குமுறைகள் ஏவப்பட்டன. தலித்துகள் மீதான வன்கொடுமைகள் நீடித்தன. தூத்துக்குடி ஸ்டெர்லைட், எட்டுவழிச்சாலை எதிர்ப்பு போராட்டங்கள் மறந்துவிட முடியாது. ஒன்றிய பிஜெபி அரசுகளில் அங்கம் வகித்து, எதோ ஒருவகையில் தமிழ்நாட்டில் பாசிச பிஜெபிக்கு பாதை போட்டுக் கொடுத்ததும், இந்த இரண்டு கட்சிகளும்தான். தமிழ்நாட்டில் கல்லூரிகளில் மாணவர் மன்றத் தேர்தல்களை ஒழித்துக் கட்டியது திமுக, அதிமுக ஆட்சிகள் தான்.

இவர்கள் ஆட்சியில் நில உச்சவரம்பு சட்டங்கள் தோற்றுப் போயின. குறிப்பாக தஞ்சை டெல்டாவில் மட்டும் நில உச்சவரம்புச் சட்டங்களை ஏய்த்து, உயர்சாதி நிலப்பிரபுக்கள் இலட்சக்கணக்கான ஏக்கர் உபரி நிலங்களை 'பினாமிகள்' 'எஸ்டேட்கள்' பெயரில் அபகரித்து, பலன் பெற வேண்டிய சுமார் 35% தலித் விவசாயத் தொழிலாளர்களுக்குத் துரோகம் இழைத்த ஆட்சிகள் திமுக, அதிமுக ஆட்சிகள்.

தற்போது தவெக ஆட்சியில், முதல்வர், அமைச்சர்கள் 1.5 இலட்சம் டிரில்லியன் டாலர் பொருளாதாரம் பற்றி பேசுகிறார்கள். பெருமுதலாளிகள் தொழில் துவங்க ஏற்கனவே நடப்பில் உள்ள 22 சட்டங்கள், நிபந்தனைகளை தாங்களே நிறைவேற்றியதாக சுய அறிவிப்பு செய்துவிட்டு தொழிற்சாலைகள் தொடங்க, 'தொழில் செய்வதை எளிதாக்கும் சட்டம்' கொண்டு வரப்பட்டுள்ளது. கார்ப்பரேட் முதலாளிகளுக்கு ஆதரவான சட்டங்கள், திட்டங்கள் போடுகிறது தவெக அரசு. விவசாயிகள் கூட்டுறவுக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய மனதில்லை. நிரந்தரமற்ற வேலைகளில் உள்ள தொழிலாளர்கள் பணி நிரந்தரம் கோரிப் போராடிக் கொண்டு இருக்கும்போது, அவுட்சோர்சிங் செய்கிறது தவெக அரசு. திமுக, அதிமுக மற்றும் தவெக போன்ற முதலாளித்துவ மாற்றுகள் நமக்கு வேண்டவே வேண்டாம்.

இடதுசாரிகள் அவரவர் சொந்த வர்க்க வெகுமக்கள் அடித்தளத்தை வலுப்படுத்திக் கொண்டு, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களையும் அணிதிரட்ட கடுமையாகப் பாடுபடுவோம்! தேர்தல் அரசியலுக்கு வெளியே மக்கள் தலைவராக எழுவோம்! 'தமிழ்நாடு இனி இடதுபக்கம்' என்பதை நிறுவுவோம்!

சிபிஐ(எம்) மாநிலச் செயலாளர் பெ. சண்முகம்:

மொழிவாரி மாநிலங்களுக்காக நீடித்த போராட்டம் நடத்தியவர்கள் கம்யூனிஸ்டுகள். திமுக ஆட்சியில் சட்டமன்றத்தில் 'தமிழ்நாடு' பெயர் சூட்டும் தீர்மானம் நிறைவேறியது. ஆனால், அதற்கு முன்பு திராவிடர் கழகமோ, திமுகவோ அக்கோரிக்கையை முன்வைக்கவில்லை; 1963 வரை 'திராவிட நாடு' கோரிக்கையே திமுகவுக்கு இருந்தது. மொழிவழி மாநிலம் அமைவதற்கு முன்பே, 1942–இல் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தை நாம் உருவாக்கினோம். நாட்டின் சிறைச்சாலைகள் அனைத்தும் கம்யூனிஸ்டுகளின் தியாகக் கதைகளைச் சொல்லும். விடுதலை பெற்று 80 ஆண்டுகளாகியும் மக்களின் துயரம் தீரவில்லை; முதலாளித்துவம் தீர்வில்லை, சோசலிசமே தீர்வு. மார்க்சியத்தை மக்களிடம் கொண்டுசெல்லவும், மக்கள் பிரச்சனைகளுக்கான தீர்வுகளை முன்வைக்கவுமே இக்கூட்டுப் பிரகடனம். மத்திய – மாநில உறவுகளை ஆராய திமுக ஆட்சியில் அமைக்கப்பட்ட நீதிபதி குரியன் ஜோசப் குழுவைத் தவெகஅரசு கலைத்தது சரியல்ல. ஒன்றிய அரசின் விபி ஜி ராம் ஜி திட்டத்தில் 125 நாள் வேலைக்கே நிதி இல்லாதபோது, கூடுதலாக 25 நாள் தருவோம் என்ற தவெக அரசின் அறிவிப்பு சாத்தியமா? 1960 முதல் 2012 வரை நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் 1.98 லட்சம் ஏக்கர் மட்டுமே விநியோகிக்கப்பட்டது; அதன் பிறகு எதுவுமில்லை. 35 ஆண்டுகளாகப் போராடியும் நீதிமன்றத் தீர்ப்புகள் இருந்தும் ஒரு ஏக்கர் பஞ்சமி நிலம் கூட மீட்கப்படவில்லை. ஆணையம் அமைப்பதாக அமைச்சர் கூறுகிறார்; நிலம் எங்கே உள்ளது என்ற விவரத்தைத் தர நாம் தயார். மீட்டு வழங்கும் அரசியல் உறுதி அரசுக்கு உண்டா? திமுக தோல்விக்கு முக்கியக் காரணம் நவதாராளமயக் கொள்கை. அதே பாதையில் தவெக அரசும் செல்வது சரியா?

சிபிஐ மாநிலச் செயலாளர் முபீரபாண்டியன்:

பெரியாரியம், அம்பேத்கரியம், தமிழ்த்தேசியம், காந்தியம் பேசும் ஜனநாயக சக்திகளையும் அணி திரட்டுவோம். "அறிவுசார் நக்சல்கள்" என்கிறார் பிரதமர்; ஆம், நாங்கள் அறிவுசார் நக்சல்கள்தான். அரசியலமைப்புச் சட்டம் வழங்கிய உரிமைகளையே நக்சல்கள் கேட்கின்றனர்; ஆனால், அவர்களின் பாதையை நாம் ஏற்கவில்லை. உச்ச நீதிமன்றம் கலைக்க உத்தரவிட்ட சல்வா ஜூடுமைக் கலைக்காமல், பழங்குடிகளைக் கொன்றதற்குப் பெருமைப்படுகிறார் பிரதமர். ஒரே ஒரு வாக்குக்காகப் போராடும் படத்தில் நடித்த முதலமைச்சர், 13 கோடிக்கும் மேற்பட்டோரின் வாக்குகள் நீக்கப்பட்ட ஜனநாயகப் படுகொலையை ஏன் கண்டிக்கவில்லை? தேர்தல் செலவை அரசே ஏற்பதுதான் தேர்தல் சீர்திருத்தத்தின் முதல் படி. நீதிமன்றத் தீர்ப்புகள் வலதுசாரிச் சிந்தனையுடன் வந்தால் எதிர்ப்போம்; வருசநாடு, பட்டினப்பாக்கம் மக்களை அகற்றினால் காடும், கடலும் பொருளிழந்துவிடும். மக்களுக்காகக் காலமெல்லாம் போராடும் கம்யூனிஸ்டுகளைத் தேர்தலில் தோற்கடிக்கிறார்கள்; தோல்வியிலிருந்து கற்போம். இடதுசாரி ஒற்றுமையை உறுதியுடன் காப்போம்; பல்கலைக்கழகத் தேர்தல்களில் இடதுசாரி மாணவர் அமைப்புகளே எங்கும் வெல்கின்றன; அடுத்த தலைமுறை இடதுபக்கம்தான்; தமிழ்நாடும் இந்தியாவும் இனி இடதுபக்கம்தான் என்றார்.

சிபிஐ(எம்) மத்தியக்குழு உறுப்பினர் என். குணசேகரன், மனிதகுலத்துக்கு ஒரே மாற்று சோசலிசம் என்பதை நவம்பர் புரட்சி பதிவு செய்துள்ளது. போராட்டமும் தியாகமும் கம்யூனிஸ்டுகளின் இரு கண்கள். தீயை அணைக்க அனைவரும் திரள்வதுபோல, ஜனநாயகத்தைக் காக்க ஜனநாயக சக்திகளை அணிதிரட்டவே இக்குழு; இது தேர்தலுக்கான கூட்டணி அல்ல. சிங்காரவேலரும், பெரியாரும் உருவாக்கிய ஈரோட்டுத் திட்டத்தை முன்னோடியாகக்கொண்டே அறைகூவல் உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

சிபிஐ தேசியக்குழு உறுப்பினர் வகிதா நிஜாம், மக்களைத் திரட்டும் கருவியாகவே இக்கூட்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளது; மக்கள் இயக்கங்களை வலுப்படுத்தி தமிழகத்தை இடதுபக்கம் திருப்புவோம் என்றார்.

நீதிபதி குரியன் ஜோசப் தலைமையிலான உயர்நிலைக் குழுவைக் கலைத்தது ரத்து செய்யப்பட வேண்டும்!

சட்டம் ஒழுங்கு சீர்குலைவுக்கு முதலமைச்சர் விஜய் பொறுப்பேற்கவேண்டும்!

இகக(மாலெ)விடுதலை கட்சியின் மாநில நிலைக்குழு கூட்டம் நவம்பர் 14, 15 தேதிகளில் திருப்பெரும்புதூரில் நடைபெற்றது. அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:–

நீதிபதி குரியன் ஜோசப் தலைமையிலான உயர்நிலைக் குழு கலைக்கப்பட்டது ரத்து செய்யப்பட வேண்டும்!

ஒன்றிய பாஜக ஆட்சி அமைந்ததில் இருந்து மாநிலத்தின் உரிமைகள் பறிக்கப்படுவது தீவிரமடைந்து வருகிறது; பாஜக அல்லாத கட்சிகளின் ஆட்சி நிர்வாகத்தின் மீதான தலையீடுகள் அதிகரித்து வருகின்றன. கூட்டாட்சி மாண்புகளை சீரழித்து ஒற்றையாட்சியாக மாற்றுவதற்கான முயற்சிகளில் மோடி – ஷா ஆட்சி இடைவிடாது செயல்பட்டு வருகிறது. மாநில அரசுகளின் நிதிகளை ஒன்றிய அரசு பறித்துக் கொண்டது. இந்திய அரசமைப்புச் சட்டம் மாநிலங்களுக்கு வழங்கியுள்ள கல்வி உள்ளிட்ட மாநில பட்டியலில் உள்ள பல்வேறு அதிகாரங்களையும் எடுத்துக் கொண்டது; மாநில அரசுகளின் ஒட்டுமொத்த அதிகாரத்தையும் பறித்து வருகிறது. இத்தகைய பின்னணியில் தான், கடந்த காலத்தில் பாஜக அல்லாத மாநில அரசாங்கங்கள், மாநில உரிமைகள் கோரி, ஒன்றிய மோடி அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்தன. முந்தைய திமுக அரசு, நிதி, நிர்வாகம், சட்டமியற்றுதல் உள்ளிட்ட மத்திய மாநில உறவுகளின் பல்வேறு அம்சங்கள் மீது ஆய்வு செய்து தக்கப் பரிந்துரைகள் செய்வதற்கு உச்சநீதிமன்ற மேனாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் உயர்நிலைக் குழுவை, கடந்த 2025ம் ஆண்டில் அமைத்தது. இக்குழுவானது தனது முதல்கட்ட பரிந்துரைகளை ஏற்கனவே சமர்ப்பித்து பணிகளைத் தொடர்ந்து வந்தது. இந்த நிலையில், தற்போதுள்ள தவெக அரசு, எவ்வித காரணங்களும் தெரிவிக்காமல், நீதிபதி குரியன் ஜோசப் உயர்நிலைக் குழுவை கலைத்து விட்டுள்ளது. இது அநீதியானது, ஏற்க முடியாதது. இந்த நடவடிக்கை, தமிழ்நாடு அரசு ஒன்றிய பாஜக அரசிற்கு பணிந்துபோகிறது என்ற தோற்றத்தைத் தருகிறது.

மாநில உரிமைகளைப் பாதுகாக்க, மத்திய மாநில உறவுகள் மீது ஆய்வு செய்து பரிந்துரைகள் செய்வதற்கு அமைக்கப்பட்ட உச்சநீதிமன்ற மேனாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையிலான உயர்நிலைக் குழு கலைப்பு உத்தரவை ரத்து செய்ய வேண்டும். மேற்படி குழு தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப்பட்டு முழுமையான அறிக்கையைப் பெறுவதற்கு அரசாணை பிறப்பிக்க வேண்டும்.

சட்டம் ஒழுங்கு சீர்குலைவுக்கு முதலமைச்சர் பொறுப்பு ஏற்கவேண்டும்!

திமுக ஆட்சியில் இருந்தபோதே சீர்கெட்டிருந்த சட்டம் ஒழுங்கு பிரச்சனையானது தவெக அரசு ஆட்சி பொறுப்பு ஏற்றபிறகும் தொடர்கிறது. காவல்நிலைய கொட்டடி மரணங்கள், கஞ்சா மற்றும் போதைப் பொருட்களின் தடையற்ற புழக்கம், சிறுமிகள், பெண்கள் மீதானதாக்குதல்கள்,பாலியல்துன்புறுத்தல்கள்,கடத்தல்கள் ஆகியவை கட்டுக்கடாமல் அதிகரித்து வருகின்றன; அதேபோல் தலித் மக்கள் மீதான தாக்குதல்களும் வன்கொடுமைகளும் தொடர் நிகழ்வுகளாகி வருகின்றன. இத்தகையப் பிரச்சினைகள் மீது, 'கடந்த ஆட்சியில் பெண்கள், குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை' என கடும் விமர்சனத்தை வைத்த தவெக தன்னுடைய ஆட்சியில் தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்கக் கூடாது. சிறுமிகள், பெண்கள், தலித்துகள் பாதுகாப்புக்கு அக்கறைமிக்க நடவடிக்கை வேண்டும். கஞ்சா மற்றும் போதைப் பொருட்கள் தடையற்ற புழக்கத்திற்கு முடிவுகட்ட வேண்டும். மதுரை செக்கானூரணி காவல் நிலையத்தில் லாரி ஓட்டுநர் இராதாகிருஷ்ணன் மர்மமான முறையில் காவல் கொட்டடியில் மரணமடைந்துள்ளார். இகக(மாலெ) நிலைக்குழு கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்கிறது. அதற்குக் காரணமானவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும். சட்டம் ஒழுங்கு சீர்குலைவுக்கு முதல்வர் விஜய் பொறுப்பேற்க வேண்டும்.

தவறிழைத்த தவெக கட்சி எம்எல்ஏக்கள், நிர்வாகிகள் மீது முதல்வர் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்!

தவெக ஆட்சியில், தவெக எம்எல்ஏ க்கள், கட்சி நிர்வாகிகளின் செயல்பாடுகள் அதிர்ச்சியளிக்கின்றன. பொதுவாழ்வில் உள்ள பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது. கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் உட்பட மாநில நிர்வாகத்தின் பல்வேறு மட்டங்களில் உள்ள பெண்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற நிலை அதிகரித்து வருகிறது. மாவட்ட ஆட்சியரிடம் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்ட கள்ளக்குறிச்சி எம்எல்ஏ அருள் விக்னேஷ் மீது இனியும் தாமதிக்காமல் நடவடிக்கை எடுத்திட வேண்டும். தவெக அரசானது, சொல்லும் செயலும் ஒன்று என்று சொல்வதற்கேற்ப செயல்பட வேண்டும்.

அதேபோல், துறையூர் சட்டமன்ற உறுப்பினர், துணை சபாநாயகர் எம்.ரவிசங்கர் , தொகுதி பிரச்சனைகள் குறித்து பேசவந்த ஒருவரைத் தாக்கிய செய்திகள், அதிர்ச்சி தருகின்றது; சம்பந்தப்பட்ட காவல்துறை ஆய்வாளரின் நடவடிக்கைகள், காவல்துறை ஆளும்

கட்சிக்கு ஆதரவாக நடந்து கொள்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. காவல்துறையை தனது பொறுப்பில் வைத்துள்ள முதல்வர் குற்றமிழைக்கும் தனது கட்சிக்காரர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடாமல், சட்டரீதியாக கைது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்!

மேக்கேதாட்டு அணை பிரச்சினை அனைத்து கட்சி கூட்டம் கூட்டப்பட வேண்டும்!

கர்நாடக அரசு, காவிரி ஆற்றின் குறுக்கே மேக்கேதாட்டு அணை கட்டுவதற்கு முனைப்புடன் முயற்சித்து வருகிறது; காவிரி நீரில் தமிழ்நாட்டின் பங்கு, உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். எனவே, தவெக அரசு 'மேக்கேதாட்டு அணை திட்டத்திற்கு ஒன்றிய மோடி அரசு எவ்வித அனுமதியும் வழங்கக்கூடாது.' என வலியுறுத்த வேண்டும். இப் பிரச்சினை பற்றி விவாதிக்க உடனடியாக அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் அனைத்து விவசாய சங்கங்கள், விவசாயத் தொழிலாளர் சங்கங்களின் கூட்டத்தைக் கூட்டிட வேண்டும்.

அரசு வேலைகளை அவுட்சோர்ஸ் செய்வதையும் மாநகராட்சி தூய்மைப் பணியினை தனியாரிடம் ஒப்படைக்க போடப்பட்டுள்ள டெண்டரையும் ரத்து செய்யவேண்டும்!

அரசாணை எண் G.O. Ms. No. 225 (21.10.2026) இன் கீழ், தவெக (TVK) அரசு, தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்குத் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமிப்பதற்கான ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal Agency), அரசு நிறுவனமான வெளிநாட்டு வேலைவாய்ப்புக் கழகத்தை (Overseas Manpower Corporation Limited – OMCL) நியமித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, தவெக அரசு வெளியிட்டுள்ள அரசாணை 181 படியான, தமிழ்நாட்டின் 21 மாநகராட்சிகள், 140-க்கும் மேற்பட்ட நகராட்சிகளில் தனியார்மயத்தை, ஒப்பந்தமயத்தை அமல்படுத்தி, தூய்மைப் பணி தொழிலாளர்களின் கடந்தகால பணிக்காலத்தை ஒழித்துக் கட்டவும் கணிசமான பணியாளர்களை வேலையில் இருந்து வெளியேற்ற போடப்பட்டுள்ள உத்தரவு மற்றும் டெண்டர்களை உடனடியாக இரத்து செய்ய வேண்டும். அரசாணை 225 முழுமையாக நீக்கப்பட வேண்டும். நீண்ட காலமாக பணி புரிந்து வரும் தூய்மைப் பணியாளர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்திட வேண்டும்.

உள்ளாட்சித் தேர்தல்களை உடனே நடத்திட வேண்டும்!

உள்ளாட்சிகளுக்கு பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதியை தாமதிக்காமல் வழங்கிட வேண்டும். உள்ளாட்சித் தேர்தலை தள்ளிப் போடுவதன் மூலம் அதிகார பரவலாக்கத்திற்கு தடை போடக் கூடாது. இது அதிகாரிகள் கையில் அதிகாரம் குவிவதற்கு வழிவகுக்கும். உள்ளாட்சித் தேர்தலை காலதாமதம் இல்லாமல் உடனே நடத்திட வேண்டும் என மாநில நிலைக்குழு கோருகிறது. உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாணவர்கள் எவ்வாறு போராட்டத்தின் முன் வரிசையில் இருக்கிறார்கள்

என்.சாய் பாலாஜி

அகில இந்திய மாணவர் கழக முன்னாள் தலைவரும் சிபிஐ(எம்எல்) செயற்பாட்டாளருமான என். சாய்பாலாஜி 10.11.2026 தேதிய 'தி இந்து' ஆங்கில நாளிதழில் எழுதிய தலையங்கப் பக்க கட்டுரையின் தமிழாக்கம் - விஜி

அண்மைய மாணவர் போராட்டங்களைத் தனித்தனியான எதிர்ப்புச் சம்பவங்களாக ஒருவர் பார்த்தால், அது தற்போதைய தேசியச் சூழலை மிகத் தவறாகப் புரிந்துகொள்வதாகும். அத்தகைய புரிதல், இந்த இயக்கத்தை அதிருப்தியின் தற்காலிக வெளிப்பாடாகவே கருதும். மேலும், இறுதியில் அது நீர்த்துப் போய்விடும் என்றும் கருதும். இன்றைய இயக்கம், மக்களின் கடந்த கால மனக்குறைகளின் படிவுகளில் கட்டமைக்கப்பட்டுள்ளது. அவை இதுகாறும் புறக்கணிக்கப்பட்டிருந்தன; திரிக்கப்பட்ட அடுக்குகளுக்கு அடியில் புதைக்கப்பட்டிருந்தன.

ஜனநாயகம் அச்சுறுத்தலுக்குள்ளாகும்போது அதை முதலில் அடையாளம் கண்டு, அதற்காகக் குரல் கொடுக்கும் சமூகப் பிரிவினராக எப்போதும் மாணவர்களே இருக்கின்றனர். 2014-ல் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம் முதன்முதலில் ஆட்சிக்கு வந்து ஏறக்குறைய ஓராண்டுக்குப் பிறகு, இந்திய திரைப்பட, தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவராக கஜேந்திர சவுகான் நியமிக்கப்பட்டதை எதிர்த்து, அந்நிறுவனத்தின் மாணவர்கள் 139 நாட்கள் பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். திரு.சவுகானுக்கு உரிய கல்வித் தகுதிகள் இல்லாத குறையை, ஆர்எஸ்எஸ் – பாஜகவுடன் அவருக்கு இருந்த நெருக்கம் ஈடுசெய்தது.

2015 ஜூன் முதல் அக்டோபர் வரை நடந்த இந்தப் போராட்டங்களே முதல் எதிர்ப்பு நடவடிக்கையாகும். அரசாங்கத்திற்குச் சவால் விடும் எந்தவொரு போராட்டத்தையும் எதிர்கொள்ளப் பயன்படுத்தப்படும் வழக்கமான உத்தியாக, போராட்டக்காரர்களை தேசவிரோதிகள் என்று முத்திரை குத்தி அரசாங்கம் எதிர்வினையாற்றியது. திரு.சவுகான் பதவி நீக்கம்

செய்யப்படாவிட்டாலும் அவரது பதவிக்காலம் 14 மாதங்களாகக் குறைக்கப்பட்டது. அரசாங்கத்தின் வெற்றி தற்காலிகமானதாகவே இருந்தது.

கடந்த காலப் போராட்டங்கள்

இத்தகைய மனக்குறைகளைத் திரித்துக்கூறுவதன் மூலம் அடக்கிவிட முடியாது — இது அரசாங்கங்கள் புரிந்துகொள்ள முடியாத ஒரு கடினமான பாடமாகும். உரிய கவனம் செலுத்தப்பட்டு தீர்க்கப்படாவிட்டால், அவை தங்களது வடிவத்தை மாற்றிக்கொண்டு மீண்டும் திரும்பி வரும்; இதையே நாம் மீண்டும் மீண்டும் காண்கிறோம். நெட் அல்லாத உதவித்தொகையை மீண்டும் வழங்கவும் உயர்த்தவும் கோரிய 'யுஜிசியை முற்றுகையிடுவோம்' இயக்கம்; 'ரோஹித் வெமுலாவுக்கு நீதி' கோரிய இயக்கம்; ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்கள் மீது புனையப்பட்ட தேசத்துரோக வழக்குகளுக்கு எதிரான போராட்டங்கள்; 'நஜீப் எங்கே' இயக்கம்; சண்டிகரில் உள்ள பஞ்சாப் பல்கலைக்கழகம், ஜேஎன்யு, டெல்லி பல்கலைக்கழகம் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் நடந்த கட்டண உயர்வுக்கு எதிரான போராட்டங்கள்; சம குடியுரிமை இயக்கம் – இவை அனைத்தும் இதற்கான எடுத்துக்காட்டுகளாகும். 2012 நிர்பயா பாலியல் வன்கொடுமைக்கு எதிரான போராட்டங்கள் போன்ற இந்தியாவின் சமூக – பாலின நீதி இயக்கங்கள், மக்களைத் திரட்டவும் பிரச்சினைகளைக் கண்டறியவும் தீர்வு காணவும் இளைஞர்களுக்குத் துணிச்சல் உண்டு என்ற கருத்தை உறுதிப்படுத்துகின்றன.



கோவிட்–19 பெருந்தொற்றும் அதைத் தொடர்ந்து வந்த பொதுமுடக்கங்களும் கல்வி அமைப்பினுடைய ஒழுங்கமைவின் மீது மேலும் ஒரு தாக்குதலை நடத்தின. ஒரு செய்தியாளர் சந்திப்பின் மூலமாக மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள் மீது புதிய தேசிய கல்விக் கொள்கை 2020 ஐ அரசாங்கம் திணித்தது. கல்வி அமைப்பில் இக்கொள்கையின் நீண்டகால விளைவுகள் இனிமேல்தான் தெரியவரும் என்றாலும் பிரச்சினைகள் இப்போதே மெல்ல எட்டிப்பார்க்கத் தொடங்கிவிட்டன. அதிகாரக் குவிப்பு, கொள்கைகளை மையப்படுத்தல், ஊழல் ஆகியவையே புதிய தேசிய கல்விக் கொள்கை 2020 உருவாக்கியுள்ள அமைப்பின் சாராம்சமாகும். இம்முறையும் மாணவர்களே இதை முதலில் எதிர்த்தனர். ஜந்தர் மந்தர் 1.0 இயக்கம் இந்த உறுதிப்பாட்டிற்கு ஒரு சான்றாக அமைந்தது.

உன்னாவ் பாலியல் வன்கொடுமை நிகழ்வு, ஹத்ராஸ் கூட்டுப் பாலியல் வன்கொடுமை, இந்திய மல்யுத்த சம்மேளனத்தின் கீழ் மல்யுத்த வீரர்கள் எதிர்கொண்ட பாலியல் துன்புறுத்தல்களுக்கு எதிரான போராட்டங்கள் ஆகியவற்றிலும் மாணவர்கள் பங்கேற்றனர். காவல்துறையின் கொடூரத் தாக்குதல், தன்னிச்சையான முதல் தகவல் அறிக்கைகள் உடன் மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளைக் கையாள்வதில் அரசாங்கத்தின் தொடர்ச்சியான அலட்சியம் ஆகிய வற்றை அவர்கள் தொடர்ந்து துணிச்சலுடன் எதிர்கொண்டனர்.

'கார்ப்பரேட் ஆட்சி' அதாவது இந்தியாவின் அதானி–அம்பானிமயமாக்கலால் ஏற்றுக்கொள்ளும்படி வார்த்தெடுக்கப்பட்ட வெறுப்புணர்வின் திட்டமிட்ட பைத்தியக்காரத்தனத்தின் பிடியில் சிக்கிய ஒட்டுமொத்த நாடும் மாணவர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட கொடூரங்களைக் கண்டும் காணாமல் இருந்தது. எனவே, அசுர பலம் கொண்ட பாசிச நடைமுறைகளை எதிர்க்கவும் சவால் விடவும் மரபுசார்ந்த பேச்சு, எழுத்து வடிவிலான போராட்டக் கருவிகள் போதுமானதாக இல்லை.

அண்மைய போராட்டங்களில் திரண்ட இந்த மக்கள் கடலானது, கடந்த காலப் போராட்டக் கிளை நதிகள் மூலமாகவும் பல ஆண்டுகளாகப் படிந்துள்ள மனக்குறைகளின் படிவுகள் மூலமாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. அவசரநிலைக்கு எதிரான போராட்டங்களில் தனது பங்கு குறித்து பெருமை பேசிக் கொண்டாடும் ஒரு அரசாங்கம், அந்தப் போராட்டமும் கூட குஜராத்தில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் கட்டண உயர்வுக்கு எதிரான மாணவர் இயக்கத்திலிருந்தே தொடங்கியது என்பதை மறந்துவிட்டது நகைமுரணாகும். தான் தனித்துவமானது, போராட்டங்கள் தன்னை ஒன்றும் செய்துவிடாது என்று அரசாங்கம் கற்பனை செய்து கொள்வது அதன் திமிர்தனமாகும்.

மாறுபட்ட போராட்ட முறை

ஜென் இசட் தலைமுறையினரின் அரசியல் பங்கேற்பு, போராட்டங்கள் நடத்தப்படும் விதத்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. நையாண்டியையும் மரபு மீறலையும் அரசியலின் ஒரு வடிவமாகக் கொண்டு, அரசியல் களத்தில் மீம்களையும் குறுங்காணொளிகளையும் மழையாகப் பொழிந்த ஒரு புயலாக ஜென் இசட் இருந்தது; கொண்டாட்டமாக இருப்பதே இங்கு அரசியல் எதிர்ப்பாக இருந்தது. இந்த உணர்வைக் கண்ட முதல் இயக்கம் ஜந்தர் மந்தர் 1.0

அல்ல. கோவிட்-க்குப் பிந்தைய காலகட்டத்திலிருந்து, குறிப்பாக, மோடி தலைமையிலான அரசாங்கத்தின் மூன்றாவது ஆட்சிக்காலத்தில் சமூக ஊடகங்களை மேலோட்டமாக ஆராய்ந்தாலே இன்ஸ்டாகிராம், ரெட்டிட் போன்ற தளங்களும் இளைஞர்களால் நடத்தப்படும் யூடியூப் அலைவரிசைகளும் எதிர்ப்பு மற்றும் சவாலுக்கான களங்களாக மாறியுள்ளதை அறியலாம்.

சமூக ஊடகங்களில் கைதேர்ந்த ஜென் இசட் தலைமுறையினர், முந்தைய தலைமுறையினரின் வாட்ஸ்அப் வழி அனுப்பப்படும் அபத்தங்களால் சோர்வடைந்து, அரசியலில் ஈடுபடுவதற்கான தங்களின் சொந்த விதிகளைக் கொண்டு வந்தது இயல்பானதே. ஜென் இசட் தலைமுறையினருக்கு, போராட்டங்கள் என்பது 'உள்ளடக்கத்தை' உருவாக்கும் களமாக மாறிவிட்டன; மேலும் நகைச்சுவையான காணொளிகளில் காவல்துறை தங்களின் அதிகார பிம்பத்தை இழந்த ஒரு துணைக் கதாபாத்திரமாக மாறியுள்ளது, இது காவல்துறை ஆட்சிக்கு அஞ்ச மறுப்பதை எதிரொளிக்கிறது. எவ்விதத் தயக்கமுமின்றி, எதையும் நேரடியாக அணுகும் பாங்கைக் கொண்ட ஜென் இசட் தலைமுறையினர், அரசியல் தலைவர்கள் பல ஆயிரம் கோடிகளைச் செலவிட்டுத் தங்களைப் பற்றித் திட்டமிட்டு உருவாக்கி வைத்திருந்த செயற்கையான பிம்பங்களை எளிதாகத் தகர்த்தெறிந்துள்ளனர்.

ஒன்றோடொன்று இணைந்த போராட்டங்கள்

தேர்தல் முறைகேடுகளுக்கு எதிரான போராட்டங்கள், வினாத்தாள் கசிவுக்கு எதிரான போராட்டத்தைப் போல உணர்வுப்பூர்வமான பிரச்சினை அல்ல என்று சில அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர். இது மீண்டும் ஒரு தவறான புரிதலாகும். எஸ்ஐஆர்-க்கு எதிரான போராட்டங்கள் மாணவர் இயக்கத்தின் மற்றொரு ஆற்றல்வாய்ந்த திருப்பமாகும்.

வேலைவாய்ப்புகளில் கார்ப்பரேட் ஏகபோகம், செயற்கை நுண்ணறிவின் அசுர வளர்ச்சியும் அதைக் கட்டுப்படுத்தலும் பொதுத்துறையிலிருந்து அரசாங்கம் வெளியேறுவது, அமெரிக்க-இஸ்ரேல் கூட்டணியால் ஏற்படும் உலகளாவிய மோதல்களின் விளைவுகள் ஆகியவற்றுக்கு அரசாங்கத்தைக் கேள்வி கேட்கவும் பொறுப்பேற்க வைக்கவும் இளைஞர்களிடம் பல மனக்குறைகள் உள்ளன. சுதந்திரமான, நியாயமான தேர்தல்களில்தான் அவர்கள் தங்கள் அரசியல் விருப்பங்களையும் மனக்குறைகளையும் வெளிப்படுத்த முடியும். இருப்பினும், தேர்தல் முறையே சிதைக்கப்பட்டு மோசடி செய்யப்பட்டால், பொறுப்பேற்கச் செய்ய இளைஞர்கள் அமைதியான போராட்டங்களை மட்டுமே நம்பியிருக்க முடியும்.

போராட்டத்தின் முதல் நாளிலிருந்தே காவல்துறைக்கு அரசாங்கம் முழு சுதந்திரம் அளித்திருந்தது. திரு.சவுகானை எதிர்த்தவர்களும் முன்னாள் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு எதிராக நின்றவர்களும் தடியடிகளையும் முதல் தகவல் அறிக்கைகளையும் எதிர்கொண்டனர். இப்போது, ஜனநாயக எழுச்சியை நசுக்க போராட்டக்காரர்கள் மீது அமைதிப் பத்திரங்கள் திணிக்கப்படுகின்றன. இருப்பினும்,



இதற்கும் எதிர்ப்பு எழுந்துள்ளது; அகில இந்திய மாணவர் கழக தலைவர் நேஹா போரா அமைதிப் பத்திரத்தில் அண்மையில் கையெழுத்திட மறுத்தது, எதிர்ப்பு எவ்வாறு சட்டமறுப்பாக மாறும் என்பதைக் காட்டுகிறது. மிருகத்தனமான வலிமையின் மூலம் போராட்டங்களை முழுமையாக அடக்கிவிட முடியும் என்று அரசாங்கம் கற்பனை செய்வது ஒரு மாயையாகும். மாணவர்களை, ஜனநாயக ஆதரவு செயற்பாட்டாளர்களை மௌனமாக்கவும் சிறையில் அடைக்கவும் 1967-ஆம் ஆண்டின் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் எவ்வாறு ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஜந்தர் மந்தரை அறிவிக்கப்பட்ட போராட்டக் களத்திலிருந்து நீக்கியதன் மூலம், மோடி தலைமையிலான அரசாங்கம் ஜனநாயகத்தையே நீக்கியுள்ளது. அமைதியான போராட்டங்கள் மூலம் ஒட்டுமொத்த இந்தியாவும் ஜந்தர் மந்தராக மாறுவதே இதை மீட்டெடுப்பதற்கான ஒரே வழியாகும். நமது கல்வி நிறுவனங்களில் பல ஆண்டுகளாக ஜனநாயக விரோதப் போக்குகளால் அழிக்கப்பட்ட ஜனநாயகத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான ஒரு படியாகவே, மாணவர் பேரவைத் தேர்தல்களை மீண்டும் நடத்தக் கோரி இந்தியாவின் பல்வேறு பல்கலைக்கழக வளாகங்களில் நடக்கும் போராட்டங்கள் அமைந்துள்ளன.

வெறுப்பு அரசியலால் ரத்தம் சிந்தும் ஒரு நாட்டில், பரந்த அளவில் சொல்லப்போனால் ஒரு சமூகத்தில், இளைஞர்கள் நகைச்சுவையுடனும் நம்பிக்கையுடனும் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். போராட்டக் களத்திலும் இளைஞர்களை நீங்கள் காணலாம்; குறுங்காணொளிகளிலும் அவர்களை நீங்கள் காணலாம். நாம் கற்பனை கூட செய்து பார்க்காத வழிகளில் பொது மனசாட்சியை வெளிக்கொணர்ந்து, இந்த இரண்டு தளங்களையும் விட்டுக்கொடுக்க இளைஞர்கள் மறுக்கிறார்கள். அவர்கள் தான் ஜனநாயகத்தின் பொது சுகாதார நிலையங்கள்; அச்சுறுத்தல்களை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து அவர்கள் எதிர்ப்பைக் கட்டமைக்கிறார்கள். இந்தப் போராட்டத்தை வலுப்படுத்தும் பொறுப்பு சமூகத்தின் பிற பிரிவினரையே சாரும். ஜனநாயகத்தை மீட்டெடுப்பதற்கான செயல்முறை இப்போதுதான் தொடங்கியுள்ளது.

இளைய தலைமுறையின் புதிய இந்தியாவை நாம் உருவாக்குவோம் !
கல்வி உரிமை – வாக்குரிமை பாதுகாப்போம் !

அகில இந்திய மாணவர் கழகம்
மாநில சிறப்பு மாநாடு

கல்வி உரிமை, வாக்குரிமைப் பாதுகாப்பு சிறப்பு மாநாடு 18.11.2026 அன்று சேலத்தில் நடைபெற்றது. அய்சா மாநிலத் தலைவர் ராகுல் தலைமை தாங்கினார். புரட்சிகர இளைஞர் கழக மாநிலப் பொதுச் செயலாளர் கோ.தனவேல் சிறப்புத் தலைவர் பெரோஸ் பாபு வாழ்த்துரை வழங்கினர். சிபிஐ(எம்எல்) அரசியல் தலைமை குழு உறுப்பினர் வீ.சங்கர், மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி, சிபிஐ(எம்எல்) மத்தியக் குழு உறுப்பினர் அ.சந்திரமோகன் வாழ்த்துரை வழங்கினர். மாநாட்டின் சிறப்பு அழைப்பாளர்களான அய்சா தேசிய பொதுச் செயலாளர் பிரசஞ்சித், தேசிய துணை தலைவர் லேகா ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர் ராகுலை மாநில ஒருங்கிணைப்பாளராக கொண்டு 13 பேர் கொண்ட தமிழ்நாடு மாநில அமைப்பு கமிட்டி தேர்வு செய்யப்பட்டது.. மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:–

ஒன்றிய பிஜெபி மோடி அரசு

- கல்வியை வணிக மயமாக்கும், சமூகநீதியை மறுக்கும் தேசிய கல்வி கொள்கை (NEP) யை திரும்பப் பெற வேண்டும்!
- NTA உள்ளிட்ட ஒன்றிய தேர்வு முகமைகளை கலைக்க வேண்டும்; நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும்
- மாநிலப் பட்டியலில் உள்ள கல்வி அதிகாரத்தை ஒன்றிய அரசு அபகரிக்க கூடாது.
- கோடிக்கணக்கான மக்கள் வாக்குரிமையை பறித்த வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் SIR ஐ திரும்ப பெற வேண்டும்.
- தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவியிலிருந்து வெளியேற்ற வேண்டும்!
- கல்வி நிலையங்களில் சாதிய பாரபட்சத்திற்கு முடிகட்ட ரோஹித் சட்டத்தை கொண்டு வரவேண்டும்.

தமிழ்நாடு தவெக அரசு.

- கல்லூரிகள், பல்கலைக் கழகங்களின் நிர்வாகத்தை ஜனநாயகப்படுத்த, தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கல்லூரி வளாகங்களிலும் மாணவர் சங்கத் தேர்தல்களை நடத்த வேண்டும்!
- சமீபத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள ஆபத்தான புதிய பல்கலைக் கழக சட்டத்தைத் திரும்பப்பெற வேண்டும்.





தோழர் பிரசஞ்சித் உரை:–

தோழர்களே,

முதலில் எனது புரட்சிகர வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜெய் பீம், லால் சலாம்.

நாம் இந்த மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், நாடு முழுவதும் பரவலாக உருவெடுத்து வரும் ஜென் சி இயக்கத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்திய இளைஞர்கள், மத்தியில் ஆளும் பாசிச பாஜக அரசைப் பணியச் செய்துள்ளனர். மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை தனது பதவியிலிருந்து விலக வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தினர். 'அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம் (AMU), அம்பேத்கர் பல்கலைக்கழகம் (AUD) தொடங்கி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் (JNU), ஜாமியா மில்லியா இஸ்லாமியா மற்றும் ஜஜடி மும்பை வரை, மாணவர் சங்கத் தேர்தல்கள்,' கல்விக் கட்டண உயர்வு, சாதிப் பாகுபாடு மற்றும் மாணவர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழகங்கள் தோறும் வலுவான மாணவர் இயக்கங்கள் உருவாகி வருகின்றன.

இந்த இயக்கங்கள் வேகமெடுத்து வரும் அதேவேளையில், ஆளும் அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைகளும் தீவிரமடைந்து வருகின்றன. அம்பேத்கர் பல்கலைக்கழகத்தில் (AUD) நமது தோழர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டதிலிருந்து, டெல்லி உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்களுக்கும் இயக்கங்களுக்கும் உள்ள ஜனநாயக வெளிகளைச் சுருக்குவதற்கான முயற்சிகள் வரை, ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல்கள் நாளுக்கு நாள் கடுமையாகி வருகின்றன.

இத்தகைய சவால்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் மத்தியிலும், அய்சா போன்ற புரட்சிகர மாணவர் அமைப்பு மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் தொடர்ந்து செல்வாக்குப் பெற்று, நம்பகமான எதிர்ப்புச் சக்தியாக உருவெடுத்து வருகிறது. இது நமது அய்சா அமைப்பை விரிவுபடுத்துவதற்கான மகத்தான வாய்ப்புகளைத் திறந்துவிட்டுள்ளது. கல்வியைத் தனியார்மயமாக்குவதும் வணிகமயமாக்குவதும் தொடர்ந்து தீவிரமடைந்து வருகின்றன. புதிய கல்விக் கொள்கை 2020 (NEP 2020)

மூலம், எளிய மாணவர்களுக்கு எட்டாக் கனியாகக் கல்வியை மாற்றவும், கல்வி முறையை மையப்படுத்தி, அதன் ஜனநாயக, மதச்சார்பற்ற மற்றும் அறிவியல் பூர்வ தன்மையைச் சீர்குலைக்கவும் முயற்சிக்கிறார்கள்.

இப்போக்குகள் தமிழ்நாடு அரசின் கல்விக் கொள்கைகளிலும் காணப்படுகின்றன.

இந்தக் கொள்கைகளுக்கு எதிராக நாடு தழுவிய இயக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

கல்வி என்பது சந்தைப் பொருள் அல்ல. அது அடிப்படையான ஜனநாயக உரிமை. சாதி, வர்க்கம், பாலினம், மதம் அல்லது பொருளாதாரப் பின்னணி போன்ற வேறுபாடுகள் எதுவுமின்றி அனைவருக்கும் கிடைக்கப் போராட வேண்டும்.

அனைவருக்கும் கல்வி, கண்ணியமான வேலைவாய்ப்பு மற்றும் சமூக நீதியை உறுதிப்படுத்துவதற்கான ஒவ்வொரு போராட்டத்திலும் அய்சா முன்னணி அமைப்பாக உருவெடுக்க வேண்டும்.

இன்றைய ஜென் சி இளைஞர்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்புப் பிரச்சினைகளில் மட்டுமின்றி, நாட்டின் ஜனநாயக விழுமியங்கள் மீதான தாக்குதல்களையும் உறுதியாக எதிர்த்து வருகின்றனர். மக்களின் வாக்குரிமையையும் ஜனநாயகப் பங்கேற்பையும் அச்சுறுத்தும் SIR போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராகவும் இளைஞர்கள் தங்களது குரலை உயர்த்தி வருகின்றனர்.

கல்வி உரிமையும் வாக்குரிமையும் அடிப்படையான ஜனநாயக உரிமைகளாகும். இதில் எதையும் ஆளும் அதிகார வர்க்கம் சீர்குலைக்க நாம் அனுமதிக்க முடியாது.

டெல்லியின் ஜந்தர் மந்தர், தற்போது புதிய எதிர்ப்புப் போராட்ட மையங்களின் அடையாளமாக மாறி வருகிறது. வளர்ந்து வரும் இந்த எதிர்ப்புணர்வு, அநீதிக்கு எதிராக, சிறந்த எதிர்காலத்திற்காகப் போராட இளைய தலைமுறை தயாராக உள்ளது என்ற நம்பிக்கையை அளிக்கிறது.

தோழர்களே, நமது கல்வி வளாகங்கள் இன்னும் சாதிய மற்றும் பாலினப் பாகுபாடுகளிலிருந்து விடுபடவில்லை. ரோஹித் வெமுலா முதல் ஐஐடி மும்பை மாணவர் சாஹில் வாகோடே வரை நிகழ்ந்த சம்பவங்கள், உயர்கல்வி நிறுவனங்களில் சாதிப் பாகுபாட்டிற்கு எதிரான போராட்டம் எவ்வளவு அவசியமானது என்பதை நினைவூட்டுகின்றன. கல்வி நிறுவனங்களுக்குள் நிலவும் சாதிப் பாகுபாடும் நீதிக்கான போராட்டமும் மீண்டும் ஒருமுறை தேசிய அளவிலான விவாதத்தின் மையத்திற்குக் கொண்டு வந்துள்ளது. எந்தவொரு மாணவரும் தனது வாழ்க்கைக்காகவும் எதிர்காலத்திற்காகவும் தனியாகப் போராட வேண்டிய நிலை இனி ஒருபோதும் ஏற்படாத வகையில், ரோஹித் வெமுலா சட்டம் (Rohith Vemula Act) என்ற கோரிக்கையை ஒரு விரிவான மாணவர் இயக்கமாக நாம் மாற்ற வேண்டும்.

அதேபோன்று, பாலினப் பாகுபாடு, பாலியல் துன்புறுத்தல் மற்றும் கல்வி வளாகங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் சமத்துவமின்மை ஆகியவற்றுக்கு எதிரான நமது போராட்டத்தையும் தீவிரப்படுத்த வேண்டும். பொறுப்புணர்வும் வலுவான செயல்பாடும் கொண்ட நிறுவனரீதியான கட்டமைப்புகளை உருவாக்க போராட வேண்டும். ஒவ்வொரு மாணவரும் கண்ணியத்துடனும், சமத்துவத்துடனும், சுதந்திரத்துடனும் கல்வி பயிலக்கூடிய கல்வி வளாகங்களை உருவாக்குவதே நமது இலக்கு.

சவால்களுக்கு மத்தியிலும், அய்சா போன்ற புரட்சிகர மாணவர் அமைப்பை விரிவுபடுத்துவதற்கான மகத்தான வாய்ப்புகள் நம் முன்னால் உள்ளன. நாம் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளைத் தாண்டி, சிறு நகரங்கள், புதிய கல்வி நிறுவனங்கள் மற்றும் தங்களது உரிமைகளுக்காகப் போராட விரும்பினாலும், ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பு இல்லாத பகுதிகளுக்கும் செல்ல வேண்டும்.

ஜந்தர் மந்தர் இயக்கத்திற்குப் பிறகு நமது அமைப்புக்குக் கிடைத்துள்ள ஆதரவு மகத்தானது. நாட்டின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது போராட்டங்களில் அவர்களுடன் நாம் நிற்க வேண்டும் என்று விரும்புகின்றனர். அய்சாவுடன் தங்களை இணைத்துக் கொள்ளவும் விரும்புகின்றனர்.

நமக்குக் கிடைத்துள்ள இந்த மக்கள் ஆதரவை அமைப்புரீதியான விரிவாக்கமாக மாற்ற வேண்டும். உறுப்பினர் சேர்க்கை இயக்கத்தைத் தீவிரப்படுத்தி அதிக எண்ணிக்கையிலான

மாணவர்களை அமைப்பிற்குள் கொண்டு வர வேண்டும். மாணவர்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விரிவான அரசியல் மற்றும் ஜனநாயகப் போராட்டங்களுடன் இணைக்க வேண்டும். இந்த நோக்கத்துடனும், "Ham Banayenge Gen-Z Ka Naya Hindustan" (இளைய தலைமுறையின் புதிய இந்தியாவை நாமே உருவாக்குவோம்) என்ற முழக்கத்துடனும், நவம்பர் 28 முதல் 30 வரை நாக்பூரில் நடைபெறவுள்ள அய்சா-வின் 11-வது அகில இந்திய மாநாடு மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

அது வெறுமனே ஓர் அமைப்பு மாநாடு மட்டுமல்ல. நாடு முழுவதும் நடைபெற்று வரும் மாணவர் இயக்கங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், தற்போதைய அரசியல் சூழலை மதிப்பீடு செய்வதற்கும், நமது எதிர்காலச் செயல்திட்டங்களை வகுப்பதற்கும், புதிய உத்வேகத்துடனும் வலிமையுடனும் அமைப்பை முன்னெடுத்துச் செல்வதற்குமானது.

முழு வலிமையுடன் நாக்பூர் மாநாட்டை மாபெரும் வெற்றியடையச் செய்ய வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன். மாநாட்டின் செய்தியை ஒவ்வொரு பல்கலைக்கழகம், கல்லூரி மற்றும் கல்வி நிறுவனத்திற்கும் கொண்டு செல்வோம். கல்வி, வேலைவாய்ப்பு, சமூக நீதி மற்றும் கல்வி வளாக ஜனநாயகத்திற்கான நமது போராட்டங்களை மேலும் விரிவுபடுத்துவோம்.

சமத்துவம், நீதி, சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய இந்தியாவைக் கட்டியெழுப்ப, ஜென் சி இளைஞர்களின் ஆற்றல், லட்சியங்கள் மற்றும் போராட்ட உணர்வை ஒன்றிணைப்போம்.

SIR மற்றும் NEP-ஐத் தோற்கடிப்போம்! இளைய தலைமுறையின் புதிய இந்தியாவைக் கட்டியெழுப்புவோம்!

பெரியார், பிர்சா முண்டா, பூலே, பகத் சிங் மற்றும் அம்பேத்கர் ஆகியோரின் பாதையில் பயணித்து, சமத்துவமான, ஜனநாயகபூர்வமான, நீதியான சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்.

லால் சலாம்! இன்குலாப் ஜிந்தாபாத்! அய்சா ஜிந்தாபாத்!

நவம்பர் புரட்சி நாளில்....



ரஷ்ய புரட்சி நாளான நவம்பர் – 07 அன்று, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) விடுதலை கட்சியின் கொடியேற்றும் நிகழ்ச்சிகள் சென்னையில் பல இடங்களில் நடைபெற்றன. அயனாவரம் ஓட்டேரியில் தோழர்கள் மகாலட்சுமியும் பூங்கொடியும் இணைந்து கொடியேற்றினர். சென்னை மாவட்ட கமிட்டி உறுப்பினர் தோழர் நாகராஜ் சிறப்புரை ஆற்றினார். வியாசர்பாடி ஜே.ஜே.ஆர் நகரில் கிளை நிர்வாகிகள் தோழர்கள் ஜெயலக்ஷ்மி, வேளாங்கண்ணி இணைந்து கொடி ஏற்றினர். கொருக்குப்பேட்டை ஜே.ஜே.நகர் கிளை நிர்வாகிகள் தோழர்கள் விஜய சாரதி, லட்சுமி ஆகியோர் இணைந்து கட்சி கொடியை ஏற்றினர்.

இந்த நிகழ்ச்சிகளில் சிபிஐ(எம்எல்) அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்கள் வீ.சங்கர், எஸ்.குமாரசாமி, மாநிலக்குழு உறுப்பினர்கள் கு.பாரதி, சுரேஷ், ஆர்.மோகன், சென்னை மாவட்டச் செயலாளர் ஜேம்ஸ், கட்சியின் மூத்த தோழர் ஏ.எஸ்.குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 'ரஷ்ய புரட்சியின் வெளிச்சத்தில் இந்திய புரட்சிக்குத் தயாராவோம்' என தோழர் ஏ.எஸ்.குமார் அறைகூவல் விடுத்தார்.

நவம்பர் – ७ ஏஐசிசிடியு மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்!







MALAE THEEPORI. PRGI No. TNTAM/2002/12013
Posted at Egmore RMS/1 Published on 1st and 16th of every month R.DIS: 2804/17







Owned and **Published** by **S.Balasundaram** from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by **Chennai Offset Printers,** 19/1,21/2, KitabathKhan Bahadur street, Ellis Rd, **Chennai** - 600002. **Editor G.Ramesh**